Administration of ancient period could be understood by analysing the records pertaining to village administration, revenue administration and temple administration. These were the main areas that served as basis for the smooth functioning of administration. The landed properties that belonged to individuals, temples, village assemblies were well marked and the boundaries were defined in accordance with the revenue documents in the presence of the revenue officials. The bureaucratic system of revenue departmentwas setup suitably and they discharged their duties perfectly at each and every village level. They were knitted perfectly from the bottom level to the central government. Various administrative bodies such as *ur, nadu, Sabha* of the villages, *Mahesvaras, Sivabrahmanas* and *Srivaishanvas* etc. for the temples, *nagarattar, Vishayattar* etc, for the *nagaras* were functioning effectively. Temples acted as the centre for all the social, economic and religious activities. The financial management was well executed with the treasuries of various kinds named as temple treasury, state treasury etc. The royal personalities including queens had thein own treasury and officers of their establishment. On the whole, the perfect and effective administration underlined the strength of the well managed state.

Some of the records reflecting the administrative aspects which prevailed in Tamilnadu are reproduced in the following pages. [Plate VII.a]

Select Inscriptions **Serial No: II : 1**

District:	*Tirunelveli*	***Dynasty:***	*Pandya*
Taluk:	*Tirunelveli*	***King:***	*Maranjadaiyan*
Village:	*Manur*	***Regnal Year:***	*35*
Language:	*Tamil*	***Historical Year:***	*898 A.D.*
Script:	*Tamil & Grantha*	***Earlier Publication:***	
		1) ARE 1907, 1913	
		2) E.I. Vol. XXII, No: 3	

Location : On one of the pillars in the AMBALAVANASVAMIN TEMPLE.

Summary:

It is an unique and outstanding inscription from the southern part of Tamilnadu. It records the resolution, passed by the *mahasabha* of *brahmadeyam* Mananilainallur in Kalakkudi-nadu. The *sabha* having declared the general body meeting by beat of drum and having assembled in the sacred place called Govartana made the following resolution *(Vyavasta)* about the participation and the membership in the Sabha.

1. One person each from one family from the original share-holders of this village and conversant with *mantra brahmana* inclusive of one *dharma* and one of good conduct shall take part in the deliberations and be treated as permanent member (with veto power).

2. Those who already owned share by purchase, or gift or dowry and conversant with *mantra brahmana* inclusive of one *dharma* and one of good conduct also shall take part with the above status.

3. Those who will acquire the right of property in future by purchase or gift or dowry shall not exercise the power as above but will be treated as ordinary members; they shall take part in the deliberations only by virtue of ¼, ½, and ¾ according to their property possession.

4. As for the purchasers of share from the original share holders, they were expected to pass an examination in an entire veda together with the *parisista* also awarded the membership of first category.

5. Those who got the *sravanai* by other means shall take part in the discussions only in accordance with the terms of this settlement

6. In virtue of this arrangment, those who do not possess a full fledged power *(sravanai)* shall not be selected to any kind of sub committees *(variyam)*

7. Those who say 'no' and cause any obstruction to this arrangement be fined five *kasus* each and even after, the terms of this resolution shall be stricly followed.

This is a very good example and speciman of efficient administration, though one could not understand exactly the meaning of some words, for the understanding of the constitution of the *sabha*. The above resolution fixed the procedure to be followed in the meetings of the *sabha* by laying down the minimum qualifications in terms of property, education and character, that would entitle persons to take part.

Since the original character of the village had undergone changes it became necessary for the *sabha* to deliberate and decide about constitution of the *sabha*, taking into consideration the future changes as well. The interest of the descendants of original share-holders were safeguarded as well as those who came as new settlers.

Text

ஸ்வஸ்தி ஸ்ரீ. கோமாறஞ்சடையற்கு யாண்டு முப்பத்தஞ்சு நாள் நான்னூற்றறு பத்து ஓன்பது

இந்நாளால் களக்குடிநாட்டு ப்ரம்மதேயம் மானநிலைநல்லூர் மகாசபையோம் பெருங்குறி சாற்றி ஸ்ரீ கோவர்தநத்துக் கூடி இருந்து இவ்வூர் மகாசபையோம் குடிமன்றாடுவதனுக்கு செய்த வ்யவஸ்தையாவது

இவ்வூர் பங்குடையார் மக்கள் சபையில் மன்றாடுகிறது ஒரு தர்மம் உட்பட மந்திரப்ராம்மணம் வல்லார் சுவ்ருத்தராய் இருப்பாரே ஒரு பங்கினுக்கு ஒருத்தரே சபையில் மன்றாடுவதாகவும்

விலையும் ப்ரதிக்ஹரமும் ஸ்ரீதநமுடையார் ஒரு தந்மமுட்பட மந்திர ப்ராம்மணம் வல்லராய் சுவ்ருத்தராய் இருப்பாரே மன்றாடுவதாகவும்

இதன் மேற்பட்டது விலையாலும் ப்ரதிக்ரஹத்தாலும் ஸ்ரீதநந்தாலும் சீராவணை புகுவார் முழு சிராவணை அன்றி கால் சிராவணையும் அரைச் சிராவணையும் முக்கால் சிராவணையும் புகவும், பணிக்கவும் பெறாதாராகவும்

பங்குவிலைக்கு கொள்பவர் ஒரு வேதம் எல்லா இடமும் சபரிஸிஷ்டம் பரிக்ஷை தந்தார்க்கே சீராவணை பணிப்பதாகவும்

இப்பரிசு அன்றி சீராவணை புக்காரையும் பின்னையும் இக்கச்சத்தில் பட்டபரிசே மன்றாடுவதாகவும்

இப்பரிசினால் முழுச் சிராவணை இல்லாதாரை எவ்வகைப்பட்ட வாரியமும் ஏற்றப் பெறாதாராகவும்,

இப்பரிசு செய்கின்றாரும் அன்றென்று குத்துக்கால் செய்யப் பெறாதாராகவும் குத்துக்கால் செய்வாரையும் குத்துக்கால் செய்வார்க்கு (உறவாயுட) நிப்பாரையும் வெவ்வேறு வகை ஐய்யஞ்சு காசு தண்டங் கொண்டு பின்னையும் இக்கக்சத்தில் பட்ட பரிசே செய்வதாகவும்; இப்பரிசு பணித்து வ்யவஸ்தை செய்தோம் மகாசபையோம்

Select Inscriptions — Serial No: II : 2

District:	*Chengleput*	***Dynasty:***	*Chola*
Taluk:	*Kanchipuram*	***King:***	*Parantaka I*
Village:	*Uttiramerur*	***Regnal Year:***	*14*
Language:	*Tamil*	***Historical Year:***	*920-21 A.D.*
Script:	*Tamil*	***Earlier Publication:***	*ASIAR - 1904-05, pp. - 131-145*

Location : On the west wall of the VAIKUNTHA PERUMAL TEMPLE.

Summary:

Inscriptions of Tamilnadu are very famous and form an important source meterial for the understanding of local government which prevailed in the medieval Tamilnadu. A series of inscriptions from Uttiramerur narrates the various functions of each committee called *'variyam'* which were the organs of the *sabha.* They hold the responsibility of important activities of each and every village. Likewise, temple administration and revenue administration were also well established in chola period i.e. from 10^{th} to 13^{th} c.A.D. Southern parts of Tamilnadu, under the rule of early Pandyas, have yielded important records which explain the form of local administration including judicial administration. Actually they were the pioneers while the Cholas developed and popularly introduced it all over their dominions, it seems.

Uttiramerur inscriptions clearly attest the rules regulating the constitution of village assemblies and the method of selection of committee members, though many inscriptions right from the period of Dandivarman specifically mention the committees.

There must have been some kind of regulation to guide the people in their elections and the *sabha* in discharging laborious duties over a long period. The fundamental principles of the working of the *sabha* as well as other regularly constituted bodies must have been the same, there must have been variations to suit the time, place, experience and attainments of the people. The regulations relating to the constitution of committee was incised as two inscriptions, under which circumstances was not revealed; one among the two is very elaborate and gives more details about the regulations and the method of constitution of the administrative body as under;

I. There shall be thirty wards.

II. In (these) thirty wards, those that live in each ward shall assemble and shall choose for "pot-tickets' *(kudav-olai)* (anyone possessing the following qualifications):

(a) He must own more than a quarter *(veli)* of tax-paying land.

(b) He must live in a house built on his own site.

(c) His age must be below 70 and above 35.

(d) He must know the *Mantrabrahmana* (i.e.) he must know (it) by teaching (others).

III. Even if one owns only one-eighth *(veli)* of land, (he shall have) his name written on the pot-ticket to be put into (the pot), in case he has learnt one Veda and one of the four *bhasyas* by explaining (it to others).

IV. Among those (possessing the foregoing qualifications)-

i) only such as are well conversant with business and are virtuous shall be taken and

ii) one who possesses honest earnings, whose mind is pure and who has not been on (any of) the committees for the last three years shall (also) be chosen.

One who has been on any of the committees but has not submitted his accounts, and all his relations specified below

shall not have (their names) written on the pot-tickets and put (into the pot):

(1) The sons of the younger and elder sisters of his mother.

(2) The sons of his paternal aunt and maternal uncle.

(3) The uterine brother of his mother.

(4) The uterine brother of his father.

(5) His uterine brother.

(6) His father-in-law.

(7) The uterine brother of his wife.

(8) The husband of his uterine sister.

(9) The sons of his uterine sister.

(10) The son-in-law who has married his daughter

(11) His father.

(12) His son.

A. One against whom incest *(agamyagamana)* or the first four of the five great sins are recorded; and

B. All his relations above specified shall not have (their names) written on the pot-tickets and put into (the pot).

C. One who has been outcast for association (with low people) shall not, until he performs the expiatory ceremonies, have (his name) chosen for the pot-ticket.

D. One who is foolhardy, ... shall not have (his name) written on the pot-ticket to be put (into the pot).

E. One who has stolen the property of others shall not have (his name) written on the pot-ticket to be put (into the pot).

F. One who has taken forbidden dishes (?) of any kind and who has become pure by performing the ghee expiation (?) shall not to the end of his life have (his name) written on the pot-ticket to be put into (the pot) for the committtees.

G. One who has committed......sins and has become pure by performing expiatory cermonies;

H. One who having been a village pest has become pure by performing expiatory ceremonies;

I. One who is guilty of incest and has become pure by performing expiatory ceremonies; all these thus specified shall not, to the end of their lives, have (their names) written on the pot-ticket to be put into (the pot) for (any of the) committees.

Excluding all these, thus specified, names shall be written for "pot-tickets' in the thirty wards and each of the wards in these twelve streets (of Uttaramallur) shall prepare a separate covering ticket for (each of the) thirty wards bundled separately. (These packets?) shall be put into a pot. When the pot tickets have to be drawn, a full meeting of the great assembly, including the young and old (members), shall be convened. All the temple priests *(nambimar),* who happen to be in the village on the day, shall, without any exception whatever, be caused to be seated in the inner hall, (where) the great assembly (meets). In the midst of the temple priests, one of them, who happens to be the eldest; shall stand up and lift that pot, looking upwards so as to be seen by all people. One ward (i.e., the packet representing it) shall be taken out by any young boy standing close, who does not know what is inside, and shall be transferred to another (empty) pot and shaken. From this pot one ticket shall be drawn (by the young boy?) and made over to the arbitrator *(madhyastha).* While taking charge of the ticket thus given (to him), the arbitrator shall receive it on the palm of his hand with the five fingers open. He shall read out (the name on) the ticket thus received. The ticket read (by him) shall (also) be read out by all the priests present in the inner hall. The name thus read out shall be put down (and accepted). Similarly one man shall be chosen for (each of) the thirty wards.

Of the thirty men thus chosen, those who had (previously) been on the 'garden committee' and on the 'tank committee', those who are advanced in learning, and those who are advanced in age shall be chosen for the 'annual committee.' Of the rest, twelve shall be taken for the 'garden committee' and the remaining six shall form the 'tank committee.' These (last) two committees shall be chosen by showing the *karai.* The great men of these three committees thus (chosen) for them shall hold office for full three hundred and sixty days and (then) retire. When one who is on the committees is found guilty of (any) offence, he shall be

removed (at once). For appointing the committees after these have retired, the members of the 'committee for supervision of justice' in the twelve streets (of Uttaramallur) shall convene an assembly *(kuri)* with the help of the arbitrator. The committees shall be appointed by drawing pot-tickets.......according to this order of settlement.

For the *'panca-vara* committee' and the 'gold committee,' names shall be written for pot-tickets in the thirty wards, thirty (packets with) covering tickets shall be deposited (in a pot) and thirty pot-tickets shall be drawn (as previously described). From (these) thirty (tickets) twelve men shall be selected. Six out of twelve (thus) chosen shall form the 'gold committee' and the (remaining) six the 'pañca-vära committee.' When drawing pot-tickets for these (two) committees next year, the wards which have been already represented (during the year in question) on these committees shall be excluded and the selection made from the remaining wards by drawing the *karai.* One who has ridden on an ass and one who has committed forgery shall not have (his name) written on the pot-ticket to be put (into the pot).

Any arbitrator who possesses honest earnings shall write the accounts (of the village). No accountant shall be appointed to that office again before he submits his accounts (for the period during which he was in office) to the great men of the big committee and (is declared) to have been honest. The accounts which one has been writing, he shall submit himself and no other accountant shall be chosen to close his accounts.

Thus, from this year onwards, as long as the moon and the sun (endure), committees shall always be appointed by "pot-tickets' alone. To this effect was the royal letter received and shown (to us), graciously issued by the lord of gods, the emperor, one who is fond of learned men, the wrestler with elephants, the crest jewel of heroes, whose acts (i.e.gifts) (resembles those of) the celestial tree, the glorious *Parakesari-varman.*

At the royal command Karanjai Kondaya-kramavitta-bhattan alias Somasiperuman of Srivanganagar in Purangarambainadu (a district) of the Chola country sat with (us) and thus caused (this settlement) to be made.

We, the (members of the) assembly of Uttarameru-caturvedimangalam, made (this) settlement for the prosperity of our village in order that wicked men may perish and the rest may prosper."

At the order of the great men sitting in the assembly, I, the arbitrator Kattippottan Sivakkuri-Rajamallamangalapriyan thus wrote the settlement.

Text

ஸ்வஸ்தி ஸ்ரீ. மதுரை கொண்ட கோப்பரகேசரி வன்மர்க்கு. யாண்டு பதினாலாவது, நாள் பதினாறு. காளியூர்க் கோட்டத்து, தன் கூற்று, உத்திர மேரூர் சதுர்வேதி மங்கலத்து சபையோம்

இவ்வாண்டு முதல் எங்களுக்கு பெருமானடிகள் எம்பெருமான் ஸ்ரீவீர நாராயணன் ஸ்ரீபராந்தக தேவன் ஸ்ரீபரகேசரி மன்னருடைய ஸ்ரீமுகம் வரக் காட்ட, ஸ்ரீமுகப்படி ஆக்ஞையினால், சோழநாட்டு புறங்கறம்பை நாட்டு ஸ்ரீவங்கநகர் கரஞ்சை கொண்டயக்ரமவித்தபட்டன் ஆகிய சோமாசி பெருமான் இருந்து, வாரியமாக ஆட்டொருகாலும் சம்வத்ஸர வாரியமும், தோட்ட வாரியமும் ஏரி வாரியமும் இடுவதற்கு வ்யஸ்தை செய்த பரிசாவது

குடும்பு முப்பது. முப்பது குடும்பிலும் அவ்வக் குடும்பிலாரே கூடி....... கால் நிலத்துக்கு மேல் அரை நிலமுடையான், தன் மனையிலே அகம் எடுத்துக் கொண்டு இருப்பான், எழுபது பிராயத்தின் கீழ் முப்பத்தைந்து பிராயத்தின் மேற்பட்டான், மந்திர பிராம்மணம் வல்லான், ஓதுவித்தறிவான், அல்லது அரைக்கால் நிலமே உடையான் ஆயினும் ஒரு வேதம் வல்லானாய் நாலு பாஷ்யத்திலும் ஒரு பாஷ்யம் வக்கணித்து அறிவான், அவர்களிலும் கார்யத்தில் நிபுணன், ஆசாரம் (ஒழுக்கசீலம்) உடையான், அர்த்த சௌசமும் (பொருள் சுத்தம்) ஆன்ம சௌசமும் (மனச்சுத்தம்) உடையான், மூவாட்டின் இப்புறம் வாரியம் செய்திலான், பெயர் தீட்டி குடம் புக இடுவதாகவும்.

எப்பேர்ப்பட்ட வாரியங்களும் செய்து கணக்குக் காட்டாது இருந்தான், இவர்களுக்கு சிற்றவை பேரவை மக்கள், இவர்களுக்கு அத்தை மாமன் மக்கள், இவர்களுக்குத் தாயோடு உடன் பிறந்தான், இவர்கள் தமப்பனோடு உடன் பிறந்தான், தன்னோடு உடன் பிறந்தான், இவர் களுக்குப் பிள்ளை கொடுத்த மாமன், இவர்கள் பிராம்மணியோடு உடன் பிறந்தாளை வேட்டான், உடன் பிறந்தான் மக்கள், தன் மகள் வேட்ட மருகன், தன்தமப்பன், தன் மகன், அகம்யாக மனத்திலும் மகாபாதகங்களில் முன்படைந்த நாலு மகாபாதகத்திலும் எழுதப்பட்டான், சம்ஸர்க்கபதிதரை பிராயச்சித்தம் செய்யும் ஆள், சாஹஸியராய் இருப்பான், பர திரவ்யம் அபகரித்தான், எப்பேர்ப்பட்ட கையூட்டும் கொண்டான், கிருதபிராயச்சித்தம் செய்து சுத்தன் ஆனான், பாதகம் செய்து பிராயச்சித்தம் செய்து சுத்தன் ஆனான், கிராம கண்டகராய் பிராயச்சித்தம் செய்து சுத்தன் ஆனான், அகம்யாகமனம் செய்து பிராயச்சித்தம் செய்து சுத்தம் ஆனான். ஆக இச்சுட்டப்பட்ட இத்தனையவரையும் நீக்கி

முப்பது குடும்பிலும் குடவோலைக்குப் பெயர் தீட்டி, இப்பன்னிரண்டு சேரியிலும் ஆக இக்குடும்பும் வெவ்வேறே வாய்ஓலை பூட்டி, முப்பது குடும்பும் வெவ்வேறே கட்டி., குடம் புக இடுவதாகவும்.

குடவோலை பறிக்கும்போது, மகாசபைத் திருவடியாரை, ஆபால விருத்தம் நிரம்ப உட்புகக் கொண்டு, அன்று உள்ளூரில் இருந்த நம்பிமார் ஒருவரையும் ஒழியாமே, மகாசபையிலே, உள் மண்டகத்திலே இருத்திக் கொண்டு, அந்நம்பிமார் நடுவே அக்குடத்தை, நம்பிமாரில் விருத்தராய் இருப்பர் ஒரு நம்பி, மேல் நோக்கி எல்லா ஜனமும் காணுமாற்றால் எடுத்துக் கொண்டு நிற்க, பகலே அநந்தரம் அறியாதான் ஒரு பாலனைக் கொண்டு, ஒரு குடும்பு வாங்கி மற்றொரு குடத்துக்கே புகவிட்டு, அக்குடத்தில் ஓர் ஓலை வாங்கி மத்யஸ்தன் கையிலே கொடுப்பதாகவும். அக்குடத்து ஓலை மத்யஸ்தன் வாங்கும்போது ஐந்து விரலும் அகல வைத்து, உள்ளங்கை யிலே ஏற்றுக் கொள்வானாகவும், வாசித்த அவ்வோலை, அம்மண்டகத்து இருந்த நம்பிமார் எல்லோரும் வாசிப்பாராகவும். வாசித்த அப்பேர் தீட்டு வதாகவும். இப்பரிசே முப்பது குடும்பிலும் ஓரே பேர் கொள்வதாகவும். இக்கொண்ட முப்பதுபேரிலும் தோட்ட வாரியமும், ஏரி வாரியமும் செய்தாரையும், வித்யா விருத்தரையும், வயோவிருத்தர்களையும், சம்வத்ஸர வாரியர்களாகக் கொள்வதாகவும். மிக்கு நின்றாருள் பன்னிருவரை தோட்ட வாரியம் ஆகக் கொள்வதாகவும். நின்ற அறுவரையும் ஏரி

வாரியம் ஆகக் கொள்வதாகவும். இவ்விரண்டு தரத்து வாரியமும் கரை கூட்டி கொள்வதாகவும்.

இவ்வாரியம் செய்கின்ற மூன்று திறத்து வாரியப் பெருமக்களும் முன்னூற்று அறுபது நாளும் நிரம்ப செய்து ஓழிவதாகவும். வாரியம் செய்யா நின்றாரை அபராதம் கண்டபோது அவனை ஓழித்துவதாகவும். இவர்கள் ஓழித்த அநந்தரம் இடும் வாரியங்களும் பன்னிரண்டு சேரியிலும் தன்ம கிருத்யம் கடைக்காலும் வாரியரே மத்யஸ்தரைக் கொண்டு குறிகூட்டிக் குடுப்பாராகவும். இவ்யவஸ்தை ஓலைப்படியே........க்கு குடவோலை பறித்துக் கொண்டே வாரியம் இடுவதாகவும்.

பஞ்சவார வாரியத்துக்கும் பொன் வாரியத்துக்கும் முப்பது குடும்பிலும் குடவோலைக்குப் பேர் தீட்டி முப்பதுவாய் ஓலைக்கட்டும் புகவிட்டு முப்பது குடவோலை பறித்து முப்பதிலும் பன்னிரண்டு பேர் பறித்துக் கொள்வதாகவும். பறித்த பன்னிரண்டிலும் அறுவர் பொன் வாரியம், அறுவர் பஞ்சவார வாரியமும் ஆவனவாகவும். பிற ஆண்டும் இவ் வாரியங்கள் குடவோலை பறிக்கும் போது இவ்வாரியங்களுக்கு முன் நாம் செய்த குடும்பு அன்றிக்கே நின்ற குடும்பிலே கரை பறித்துக் கொள்வதாகவும்.

மத்யஸ்தரும் அர்த்த சௌசம் (நாணயம்) உடையானே கணக்கு எழுதுவான் ஆகவும். கணக்கு எழுதினான் கணக்குக் காட்டி சுத்தம் ஆச்சிதின் பின் அன்றி மற்று கணக்கு புக பெறாதான் ஆகவும். மாற்றுக் கணக்கர் புக்கு ஓதுக்கப் பெறாதார் ஆகவும். இப்பரிசே இவ்வாண்டு முதல் சந்திராதித்யவித் என்றும் குடவோலை வாரியமே இடுவதாக தேவந்திரன், சக்கரவர்த்தி, பண்டித வத்ஸலன், குஞ்சரமல்லன், சூரசூளாமணி, கல்பக சரிகை, ஸ்ரீபரகேசரிபன்மர்கள், ஸ்ரீமுகம் அருளிச் செய்து வரக் காட்ட, ஸ்ரீஆணையால் சோழநாட்டுப் புறங்கறம்பை நாட்டு ஸ்ரீவங்கநகர் கரஞ்சை கொண்டய கிரமவித்தபட்டன் ஆகிய சோமாசி பெருமான் உடனிருந்து இப்பரிசு செய்விக்க. நம் கிராமத்துக்கு அப்புதமாக துஷ்டர் கெட்டு, விசிஷ்டர் வர்த்திப்பதாக வ்யவஸ்தை செய்தோம், உத்திரமேரூர் சதுர்வேதி மங்கலத்து சபையோம். இப்பரிசு குறியில் இருந்து பெருமக்கள் பணிக்க வ்யவஸ்தை எழுதினேன் மத்யஸ்தன் காட்டிப் போத்தன் சிவக்குறி இராஜமல்ல மங்கலபிரியனேன்.''

Select Inscriptions		**Serial No:**	**II : 3**
District:	*Chengleput*	**Dynasty:**	—
Taluk:	*Tiruvallur*	**King:**	—
Village:	*Tiruninravur*	**Regnal Year:**	*23*
Language:	*Tamil*	**Historical Year:**	*10th c.A.D.*
Script:	*Tamil*	**Earlier Publication:** *Avanam Journal No: 7, 1996*	

Location : On a roof of the Circumabulatory path in BAKTHAVACH-CHALA PERUMAL TEMPLE.

Summary:

This inscription, though fragmentary helps to understand some obscure points regarding the constitution and the functions of village administrative committee. It is stated that the dêcision was taken by the *mahasabha* for the welfare of the village. Though the method of selection was same as mentioned in the famous Uttiramerur inscription, here it is to be noted that, the members of the various committees *(Variyar)* and the members of Judicial Court are well differentiated. And some more members also might have been elected as members of the sabha and they would not be the members of either *Variyas* or judicial committee, The members of both the category couldnot serve more than 5 years and those who served within two years prior could not be elected again and the brothers, fathers and sons of whom are also prohibited for nomination. Those who violated these rules should be punished with the penalty of 25 *kalanju* of gold.

Text

.... மஹாஸபையோமும்

யாண்டு இருபத்து மூன்றாவது கும்பநாயறு முதல் மன்றாடுகின்ற ஸபையோமும் ஏரிவாரியப் பெருமக்களுந், தோட்ட வாரியப் பெருமக்களும், பட்டப் பெருமக்களும், வசிஷ்டப் பெருமக்களும் உள்ளிட்ட மஹாஸபையோம்

இந்நாள்ளால் எம்மூர்ப் பேரம்பலத்தேய் ஸபால வ்ருத்தி குறைவறக் கூடியிருந்து நம்மூர்க்கு க்ராமஹிதார்த்தமாகச் செய்த வ்யவஸ்தையாவது

இவ்வாண்டு முதல் மன்றாட்டும் வாரியங்களும் எழுதும்பொழுது மஹாஸபை குறைவற ப்ரஹ்மஸ்தாநத்தே கூடியிருந்து மஹாஸபைக்கு ஓத்தாரையே அற்றைக்கு(ண்)டான ஐய்யாட்டை நாள் மன்றாடியும், வாரியஞ் செய்யாதாரையே மன்றாட்டும் வாரியமும் இடுவதாகவும், வாரியமெழுது மாண்டின் முன் இரண்டாண்டு வாரியஞ் செய்தாருக்கும் உடப்பிறந்தாருந் தமப்பனும் மக்களும் ஒழிய, பேர் எழுதுவதாகவும் இப்பரிசு எழுதப்பட்டாரை மஹாஸபை நடுவேயிருந்தே குடிமை ஏல்பாராகவும்

இப்பரிசன்றிக் குடிமை ஏன்றார் ஊருக்குப் பிழைத்தாராகவும் (வாரிய பலஞ்) குன்றியே கொள்வா ராகவு மன்றாடியும் வாரியஞ்செய்து விட்டார்கள் புக்க ஸபையார்க்கு கணக்குக் காட்டி ஓட்பித்து வ்யவஸ்தை செய்தோம், மஹாஸபையோம்

இவ்யவஸ்தையில் (பிழைத்)தாரை நம்மூர் சீராவ(ணை) பாகிகரை வேண்டிநான், தர்ம்மாஸநத்து நிசதி இருபத்தைஞ் கழஞ்சு பொன் தண்டமிடப் பெறுவாராகவும்

இவ்யவஸ்தை செப்பேட்டில் வெட்டி. ....

Select Inscriptions Serial No: II : 4

District:	*Kanchipuram*	**Dynasty:**	*Chola*
Taluk:	*Kanchipuram*	**King:**	*Kulottunga I*
Village:	*Kanchipuram*	**Regnal Year:**	14
Language:	*Tamil*	**Historical Year:**	1084 A.D.
Script:	*Tamil*	**Earlier Publication:** *ARE 1921. No:39*	

Location: On the north wall of the mandapa in front of the ULAGALANTHA PERUMAL TEMPLE.

Summary:

This is one among the rare inscriptions which records the direct involvement of the king in donation made to temple. This inscription records the reallotment, resurvey and reregistration of the land measuring 36 *patti* by the king on the representation made by the royal ladies namely Adittan Kampadeviyar alias Tirubhuvanamudaiyar and Adittan Andakuttiyar alias Anukkan

cholakula valliyar, which were originally donated to the temple of Tiruvuragam after purchase from the *nagarattar* and the residents of Tundunukkacheri; the details were engraved both in copper plate and walls of the old temple.

In the meanwhile, when the land was left uncultivated, the cloth merchants *(saliya nagrattar)* of Kanchipuram cultivated that land after getting the permission from the king. Now, that land has been restored to the temple in accordence with old records to meet the expenses for the midnight worship and the early morning services and food offerings etc, on the order and by means of ritual giving i.e pouring with water.

The royal order has been sent to both of the persons concerned, *saliya nagarattar* and the official Munayataraiyar alias Siyarurdeva, *dandanayaka* and a native of Avur in Avurkurram in Nittavinodavalanadu a subdivision in Jayankonda Cholamandalam. The decision of giving back that particular land to the temple by abolishing the enjoyment of *saliya nagarathar* has been announced through the beating of drum, pronounced the four boundaries and engraved on stone i.e on the walls of the temple in accordance with the writing of official *'Tirumandira olai'* called Abayanarayana Pallavaraiyar.

The interesting point in this record is, that the king himself paid a visit to the temple and performed worship by offering the flowers at the feet of the deity and stood in the sanctum along with his queen Tirubuvanamudaiyar. According to her request he donated the lands on behalf of his own and in the name of the queen by pouring water, which was received by one Kesavabhatta, son of Pallikondan of Guntur, a resident of Sridharacheri in Sri Rajendrachola chaturvedimangalam, an independent village in Kaliyur *kottam*, who was the worshipping priest of that temple and the descendent of a *vedabrahmana* family, doing worship by following the rules underlined in *Pancharatra* texts from time immemorial.

Text

ஸ்வஸ்திஸ்ரீ. புகழ்மாது விளங்க ஜயமாது விரும்ப நிலமகள் நிலவமலர் மகள் புணர உரிமையிற் சிறந்த மணி முடிசூடி மீநவர் நிலை கெட வில்லவர் குலைதர ஏனை மன்னவர் இரியலுற்றுழிதரத் திக்கனைத்துந்

தன் சக்கர நடாத்தி விஜயா அபிஷேகம் பண்ணி வீரஸிம்மாஸனத்து அவனி முழுதுடையாளொடும் வீற்றிருந்தருளிய கோவிராஜகேசரி பன்மரான திருபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீகொலோத்துங்க சோழ தேவற்கு யாண்டு 14-ஆவது நாள் 240-னால்

ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து மணையிற் கோட்டத்துத் தக்கோலமான குலோத்துங்கசோழபுரத்துக் கோயிலினுள்ளால், வடபக்கத்து தேவாரத்து தேவாரஞ் செய்தருளிப் பள்ளிப்பீடத்து எழுந்தருளியிருக்க

காஞ்சிபுரத் திருஊரகத்து ஆழ்வார் அடியாரில் ஆதித்தன் கம்பதேவியரான நம்பிராட்டியார் திரிபுவநமுடையாரும் ஆதித்தன் ஆண்டகுட்டியாரான அனுக்கியார் சோழகுலவல்லியாரும் எம்பெருமான் திருஊரகத்து ஆழ்வார் அனாதியாக காஞ்சிபுரத்து நகரத்தார் பக்கலுந் துண்டுனுக்கச் சேரியார் பக்கலும் விலை குடுத்துக் கொண்டுடைய கோநேரிமேட்டு மதகின்வழி நீர்பாய்ந்து விளைந்துவருந் துணி நிலங்களாய்ச்

செம்பிலும் ஆழ்வார் பழைய கோயிலிலும் திருச்சுற்று மாளிகையிலும் உள்ள சிலாலேகைப்படி உள்ள நிலம்

அவகள் செய்வார் இன்றிப் பாழ்கிடந்தமையில், காஞ்சிபுரத்து சாலிய நகரத்தார், ''திருவாய் மொழிந்தருளிப் பெற்றோமென்று'' அனுபவியா நின்றார்கள்;

இந்நிலம் முன்பு உடையபடியே ஆழ்வார்க்கே பெற வேண்டுமென்றும் அடியோம் விண்ணப்பத்தால் மீண்டமை சொல்லிப், பறையும் அறைவித்துப் பெருநான்கெல்லையும் பேசி, ஆழ்வ்ார் கோயிலிலே ஆழ்வார்க்குத் திரு அத்தசாமத்துக்குந், திருப்பள்ளிஎழுச்சிக்குந், திருக்கண்ணாமடைக்கும் மற்றும் இத்தேவர்க்கு வேண்டும் விபவங்களுக்குமாக இந்நிபந்தந் தந்தோ மென்று திருஊரகத்து நின்றருளின ஆழ்வார் திருக்கையிலே நீர்வார்த் தருளி, கல்லும் வெட்டுவித்துக்கொள்ளப் பெறுவோமாகத் திருவாய் மொழிந்தருளிக் காஞ்சிபுரத்துச் சாலிய நகரத்தார்க்குத் திரு ஊரகத்து தேவர் நிலமாய் நம் இடையில் பெற்று தாங்கள் அனுபவிக்கிற நிலம் திருஊரகத்து நின்றருளின தேவர்க்கே பண்டு உடையபடியே குடுத்தோம்; விட்டுக்குடுக்கவென்று பிரஸாதஞ்செய்தருளி வந்த திருமுகப்படியாலும், ஜயங்கொண்ட சோழமண்டலத்துக்கு அதிகாரித் தண்டநாயகஞ் செய்கிற சோழ மண்டலத்து நித்தவிநோத வளநாட்டு ஆலூர்க் கூற்றத்து ஆலூர் உடையான் சியாளூர் தேவன் காரியரான முனையதரயர்க்குப் பிரசாதஞ் செய்தருளி வந்த திருமுகப்படி

ஐயங்கொண்ட சோழமண்டலத்து எயிற்கோட்டத்து நகரங் காஞ்சிபுரத்து திருஊரகத்து நின்றருளின தேவர் காஞ்சிபுரத்து நகரத்தார்பக்கல் மதிட்புறத்துந் துண்டுணுக்கச் சேரியார் பக்கலு(ம்) விலை குடுத்துக் கொண்டு கோநேரிமேட்டு மதகின் வழி நீர்பாய்ந்து விளைந்துவருந் துணி நிலங்களாய்ச் செம்பிலுங் கல்லிலும் உடைய நிலம் அவர்கள் பயிர் செய்வார் இன்றிப் பாழ்கிடந்தமையில் காஞ்சிபுரத்துச் சாலியர்க்கு நாங்குடுக்க அனுபவியா நின்றாகளென்று இந்நிலமானது தேவர்க்கே பழம்படியே பெற்றுத் திருவத்தசாமத்துக்குக்குந் திருப்பள்ளி எழுச்சிக்குந் திருக்கண்ணாமடைக்கும் மற்றும் இத்தேவர்க்கு வேண்டும். விபவங்களுக்குமே பெறவேண்டுமென்று நம்மோடு இருக்கும் பெண்டுகளில் திரிபுவனமுடையாளுஞ் சோழகுலவல்லியு நமக்கு சொன்னாகள்

திரு ஊரகத்து நின்றருளின தேவர்முன்பு அநாதியாகக் காஞ்சிபுரத்து நகரத்தார் பக்கல் மதிட்புறத்துந் துண்டுணுக்கச் சேரியார் பக்கலும் விலை குடுத்துக் கொண்டு கோநேரிமேட்டு மதகின் வழி நீர்பாய்ந்து விளைந்து வருந்துணி நிலம் முப்பத்து ஆறுபட்டியும் முன்பு பழைய கோயிலினும் திருச்சுற்று மாளிகையிலும் உள்ள சிலாலேகைப்படியே இறையிலியாக இத்தேவர்க்கு வேண்டும் விபவங்களுக்கே நாமே நீர்வாற்த்துக் குடுத்தோம்; இப்படி திரிபுவனமுடையாளுஞ் சோழகுலவல்லியும் நமக்குச் சொல்ல மீண்டமை செப்பிப் பறையும் அறைவித்துப் பெருநான்கெல்லையும் பேசிக் கோயிலில் கல்லும் வெட்டுவித்துக் குடுக்கவென்று திருமந்திர ஓலை அபையநாராயணப் பல்லவரையர் எழுத்தினால் பிரஸாதஞ் செய்தருளி வந்த திருமுகப்படியாலும், கேழ்விப்படியாலும்

இக்கோயிற் பூரண கும்பங்கள் பொன்னும், வெள்ளியும், மேய்வித்தருள கோயிலின் உள்ளே புகுந்தருளி ஆழ்வாரைத் திருவடிதொழுது திருவாராதினை பண்ணி ஸ்ரீபாதபுஷ்பம் இட்டருளி திருவுண்ணாழிகை உள்ளே நிந்றருளின இடத்து நம்பிராட்டியார் திரிபுவனமுடையார் எம்பெருமான் ஆழ்வார்க்குத் தந்தருளின நிலங்களுக்கும், அடியேன் பேரால் இட்டருளின ஊர்க்கும், ஆழ்வார்க்கு இந்நிமந்தங்களுக்கே தந்தோமென்று ஆழ்வார் திருக்கையிலே நீர்வார்த்தருள வேண்டுமென்று விண்ணப்பஞ் செய்ய, கலசப்பானையும், நீரும் எடுத்துக் குடுத்தருள, வாங்கியருளித் திரு ஊரகத்து நின்றருளின பரமஸ்வாமிகளுக்கு இந்நிமந்தங்களுக்கே இந்நிலங்களும் இவன்பேரால் பிறிந்த ஊரும் இறைஇலி தேவதானமாக சந்திராதித்தவரை செல்ல நாமே தந்தோமென்று நீர்வார்த்தருள,

ஸ்ரீ ஹஸ்தம் ஏற்றான்

இவ் ஆழ்வாரை அனாதியாக ஸ்ரீ பஞ்சராத்திரசாஸ்திரத்தினால் திருவாரா தனை பண்ணிவரும் வேதப்பிராமணர் வங்ஸத்தில் காலியூர்க் கோட்டத்து தனியூர் ஸ்ரீராஜேந்தரசோழச் சருப்பேதிமங்கலத்து சீதரச்சேரிக் குண்டூர்ப் பள்ளிகொண்டான்பட்டன் மகன் கேசவபட்டன் ஏற்க நீர்வார்த்தருளி இப்படிச் சொல்லி சிலாலேகை செய்து கொள்கவென்று திருவாய் மொழிந்தருளச் சிலாலேகை செய்த நிலமாவது

சித்திரவல்லிப் பெருஞ்செறுக்குழி ஆயிரமும் சீதேவி குழி ஆயிரத்து எழுபதும் கோரைக் கொள்ளி தடி மூன்றிநால் கரம்பு உட்படக் குழி தொள்ளாயிரத்து ஒருபத்தாறும் திருக்காளீஸ்வரமுடைய மஹாதேவர் தேவதானத்துக்குக் கிழக்கும் வடபாற்கெல்லை இத்தேவர் தேவதானத்துக்கு தெற்கும் தென்பாற்கெல்லை திருக்கந்தீஸ்வரமுடைய மஹாதேவர் கோயிலின் வடக்கில் மதிளின் வடபக்கத்து நந்தவனத்தின் வடக்கில் நீரோடு காலான கருமாணிக்க வாய்க்காலுக்கு வடக்கும் கீழ்பாற்கெல்லை குளத்தின் மேல்கரை அகப்பட்ட மேற்கும் நடுவுப்பட குழி இருனூற்று ஐம்பதும், வலைச்சேரிக் குண்டில் குழி இருனூற்று ஐம்பதும், காடன் செறுக்குழி தொளாயிரத்தறுபதும், கல்மடைகுழி ஆயிரத்திருனூற்று நாற்பத்தைஞ்சும் கருமாணிக்கப் பெருஞ் செறுக்குழி ஆயிரத்து முன்னூற்று இருபத்திரண்டும், உலை மாராயன் குண்டில் இரண்டும் உட்படக் குழி ஆயிரத்து நானூற்று நாற்பத்தைஞ்சும், இராரான் செறுத்தடி ஆறினால் குழி ஆயிரத்தருனூறும், பொந்நியக்கி குழி தொளாயிரத்து எண்பத்து இரண்டும், நக்கபிரான்குழி ஆயிரத்து ஒருனூறும், இன்னும் ராஜராஜப் பெருவழிக்கு கிழக்கு துண்டுனுக்கச்சேரியார் எல்லையே கிழக்கு நோக்கிச் சென்று கஞ்சநந்தி விஷ்ணுகிரஹத்து ஆழ்வார் தேவதானம் மேல் எல்லை உற்று இவ்வெல்லையே தெற்கு நோக்கி சென்று இவ்வெல்லையே கிழக்கு நோக்கி கம்புழான் பரமமாமணித்துக்கையார் தேவதானத்து மேல் எல்லை உற்று இவ்வெல்லையே கிழக்கு நோக்கிச் சென்று மாநகரப் பெரும்பள்ளிப் பள்ளிச்சந்தம் குண்டிகைப் பட்டியிந் மேலெல்லை உற்று இவ்வெல்லையே தெற்கு நோக்கிப் பதிநறு சாண் கோலால் ஐங்கோல் செந்று இதந் தெற்கெல்லை உற்று இவ் வெல்லையே கிழக்கு நோக்கிச் சென்று முக்குடையாந்கண்ணிக் காலேயுற்று புலவர் தலைவர் ஜிநாலயப் பெரும்பள்ளித் தேவர்க்குத் திருவமுதிற்கு நகரத்தார் விட்ட நிலத்திந் தெந்மேல்மூலை உற்று இதே நிலத்திந் தெற்கு மாநகரப் பெரும்பள்ளிப் பள்ளிச்சந்தம் மூந்று பட்டியிந் மேல்வரம்பில் இம்முக்குடையாந் கண்ணிக்காலே தெற்கு நோக்கிச் செந்று திருவூரக முடைய தேவர் நிலத்திந் தெந்கீழ் மூலையே கிழக்கு நோக்கின கருமாணிக்க

வாய்க்காலையுற்று மாநகரப் பெரும்பள்ளிப் பள்ளிச்சந்தத்திந் வடவெல்லையே இக்கருமாணிக்க வாய்க்காலே, மேற்கு நோக்கிச் செந்று இப்பள்ளிப் பள்ளிச்சந்தத்திற் வடமேந்மூலையுற்று இந்த மேலெல்லையே, தெற்கு நோக்கிச் செந்று திருவேகம்பமுடையார் தேவதாநம் ஆறுபட்டியிந் வட கீழ் மூலையுற்று இதந் வடவெல்லையே மேற்கு நோக்கிச் சென்று காமக்கோப்புளிப் பிடாரிபட்டியிந் வடவெல்லையே மேற்கு நோக்கிச் சென்று ராஜராஜந் பெருவழியுற்று இவ்வெல்லை பேசிந நிலங்களிந்நுள் நீர் நிலமும் புந்செய்நிலமும் உள்மேடும் உள்ளுள்ள குளங்களும் அகப்பட்டவும் இன்நம் ஆறுபட்டிக் கீழெல்லைக்குக் கிழக்கும் அமண் சந்தத்து தெற்கும் தெற்பாற்கெல்லை திரயநேரிக்குப்போந பெருவழிக்கு வடக்கும், கீழ்பாற்கெல்லை சிவிழக்கேரி கீழ்கரை மண்பாட்டுக்கு மேற்கும் இவிசைந்த பெருநான்கெல்லைக்குள் அகப்பட்ட சிங்கருமாந் செறு பழங்கோலால் குழி ஆயிரத்திருநூறும், இந்நம் இத்தேவர்க்கே பகலடைப்பாந் வாசலாந மும்முடி சோழந் திருவாசலுக்குக் கிழக்கில் ஏரியில் தலைப்பேழை பெற்று வைசவூர் ஏரிக்கு நீர்ப்பாயும் பெருவாய்காலிந் தெந்கரையில் நகர நிலமாந மாலைக்காரர், பூந்தோட்டங்களிந் கீழ்பாற்கெல்லையில் திருவூரகத்து நிந்றருளிந தேவர்க்குச் செங்கழுநீர்க்குளமாக வளையில் வாணியந் கல்லுவித்த குளத்திந் மேல்கரையே இந்நிலத்துக்கு மேல் எல்லையாக இத்தேவர் நிலத்தை வலமாக எல்லை குறித்த பரிசாவது

இக்குளத்திற் வடகரையே உற்ற வைகவூர்க்கு நீர்பாய்கிற பெருவாய்காலை ஊடறுத்து இதின் வடகரையே துடங்கி பதினாறு சாண்கோலாலே திரைய னேரிக்குப் போகிற பெருவழி உற்ற வடக்கு நோக்கி இருபத்து எண்கோல் சென்று இன்நிலத்துக்கு வடவெல்லை ஆவது இப்பெருவழியே கிழக்கு நோக்கி நூற்று ஒரு பத்து ஐந்துகோல் ஐய்யநேரி வடகீழ் மூலையுற்று யிதின் கீழ்க்கரையே தெற்கு நோக்கி முப்பத்து எழுகோல் சென்று இன்னம் கிழக்கு நோக்கி பதிநால்கோல் வள்ளுவந் சிற்றேரி வடகீழ் மூலையுற்று இந்நம் இவ்வேரி கீழ்கரை உட்பட தெற்கு நோக்கி ஐஞ்பத்து இரு கோல் நீளம் சென்று வைகவூர் ஏரிக்கு நீர்பாய்கிற பெருவாய்க் காலை ஒருகோல் ஊடறுத்து இதிந் தெந்கரையுற்றுக் கிழக்கு நோக்கி வடகோயிலாந் பட்டிக்கு எல்லையாந நீரோடு வாய்க்காலிந் தெந்வரப்பேய் கிழக்கு னோக்கிப் பதிநறுசாண்கோலால் ஐம்பத்தாறே முக்கால் கோல் வைகவூர் மேலெல்லையான ஈக்காட்டார் பெருவழியே முடிகொண்ட சோழப் பெருன்தெருவில் வீரராஜேந்திரத் துக்கையாருடைய நிலம் மூடியின் மேலெல்லையான ஈக்காட்டார் பெருவழியே திருவூரகமுடைய தேவர் நிலமான மைச்சிறுப்பாளபட்டிக்குக் கீழெல்லையாக ஈக்காட்டார் பெருவழியே தெற்கு நோக்கிப் பதிநறுசாண் கோலால் நாற்பத்தேழரைக்

கோல் சென்று இன்நம் இக்கோயிலில் வெண்ணைக்கூத்தாழ்வார்க்கு திருவமுர்துள்ளிட்ட நிமன்தங்களுக்கு காஞ்சிபுரத்து நகரத்தார் பக்கல் ராஜேந்திரசோழ தேவர்க்கு யாண்டு ஐஞ்சாவது ராஜேந்திரசோழ பிரஹ்மாதி ராஜன் கொண்டு விட்ட நிலம் தென்கோயிலான்பட்டிக்கு கீழ்பாற்கெல்லை பேசின திருவூரகமுடைய தேவர் நிலம் திருவரங்க தேவன் பட்டியின் வடவரம்பே மேற்கு நேர்க்கி இன்நம் இத்தேவர் நிலம் நாராயணன் பட்டியின் தென்வரம்பே இத்தென் கோயிலான் பட்டிக்கு வடவெல்லையாக கொண்டு மேற்கு நோக்கி இன்னம் திருவூரகமுடைய தேவர் நிலம் எழுமாவின் தென்வரப்பே இத்தென்கோயிலான்பட்டிக்கு மேலெல்லை பேசின கலிப்பகைப் பட்டிக்கு வடவெல்லையாக கொண்டு மாக்கொண்டது ஐஞ்நூறாகவும் பட்டி கொண்டது ஆயிரங்குழியாகவும் கோல் பதிநறு சாண் கொண்டது கோலாகவும் கொண்டு மேற்கு நோக்கி நூற்றொருபத்தொரு பத்தறு கோல் நகர நிலமுறச் சென்று இவ்வெழுமாவின் மேலெல்லையே வடக்கு நோக்கி இருபத்து முக்கோல் சென்று இன்னம் மேற்கு நோக்கி வளையில் வாணியன் ஏரியின் தென்கரையே மேற்கு நோக்கி முப்பத்தைங் கோல் மேல் கரையுறச் சென்று இன்னம் மேல் கரையே வடக்கு நோக்கி வைய்கவூரார் ஏரிக்கு நீர்பாயுங்காலின் தென்கரையுற இருபத்து முக்கோல் சென்று இன்னம் சூர்ய தேவர் பள்ளத்து திருவூரகமுடைய தேவர் கலியுகத்துக்கு முன்பு அர்ச்சித்த திருவனந்தாழ்வார்க்கு நித்தமாகமாவும் பாலும் அமுது செய்தருளுகைக்கு விட்ட நிலத்துக்கு கீழ்பாற்கெல்லை சாத்துவாயேரி மண்பாட்டுக்கு மேற்க்கும், தென்பாற்கெல்லை சூர்யதேவர் நிலத்துக்கு வடக்கும் மேல்பாற்கெல்லை வானவன் மஹாதேவீஸ்வரமுடையார் நிலத் துக்குக் கிழக்கும் வடபாற்கெல்லை நகர நிலத்துக்கு தெற்கும் நடுவுபட்ட நிலம் இரண்டுபட்டியும்

இன்னம் அமாவாசைகளில் நித்யமாக ஸ்நபந மாடியருளிப் பெருன் திருவமுது செய்தருளுகைக்கும் ஏகோத்ஸவம் எழுன்தருளுகைக்கும், வேண்டும் நிமந்தங்களுக்கு ஸ்ரீ வீரராஜேந்திரதேவர் அருளிச் செய்து நீர்வார்த்தருளி அகரப்ரஹ்மதேயம் ஸ்ரீ வீரராஜேந்திரச் சருப்பேதி மங்கலத்து இறையிலி தேவதானமாக பிறிந்த துணிநிலமாவது, இவ்வூர் ஐஞ்நூற்றொருபத்திரண்டு குழி கொண்டது ஓரு மாவாகச் சுத்தமலிவதிக்கு மேற்கு வீரராஜேந்திர வாய்க்காலுக்குத் தெற்கு இரண்டாங் கண்ணாற்று ஆறாஞ்சதுரம் எட்டுமாவில் தெற்கடைய நிலம் நாலுமாகவும் மூன்றாங் கண்ணாற்று ஆறாஞ்சதுரம் எட்டுமாவில் வடக்கடைய நிலம் நாலு மாவும் ஆக நிலம் எட்டு மாவும்

இன்நம் திருவூரகத்தாழ்வார் திருநந்தவனம் பேரருளாளனுக்குப் பெருநான் கெல்லை பேசினபடி கீழ்பாற்கெல்லை, இரவிகுல மாணிக்கப் பெருந்தெருவில்

மேல் சிறகில் மேற்கில் வா நீளத்துக்கு மேற்கும் தென்பாற்கெல்லை இராஜராஜப் பெருன்தெருவில் வட சிறகில் வாநீளத்துக்கு வடக்கும் மேல்பாற்கெல்லை திருநகரீஸ்வரமுடைய மஹாதேவ திருநன்தவனத் துக்குக் கிழக்கும் இதன் வடக்குத் திருவாய்ப்பாடி ஆழ்வார் சன்னதித் தெருவில் தென்சிறகில் வாணிளத்துக்குத் தெற்கும், இப்படி இந்நிலங்கள் சந்திராதித்தவரையும் செல்லச் சிலாலேகை செய்தோம்.

Select Inscriptions — Serial No: II : 5

District:	*Tiruchirappalli*	**Dynasty:**	*Pandya*
Taluk:	*Tiruchirappalli*	**King:**	*Sundarapandya*
Village:	*Srirangam*	**Regnal Year:**	*10*
Language:	*Tamil*	**Historical Year:**	*1261 A.D.*
Script:	*Tamil & Grantha*	**Earlier Publication:**	

Earlier Publication:
1. *ARE - 1938-39, Nos. 51 & 89*
2. *S.I.I. Vol - XXIV - Nos-203 & 257*

Location : 1. On the south wall of the CHANDANA MANDAPA &
2. On the south wall of the second *prakara* in SENAI-MUDALIYAR SHRINE

Summary:

Two inscriptions following below record the elaborate arrangements made to tackle the complexities in the administration of the temple. In one of the inscription (No.1) it states that the endowments were looked after by ten persons representing the *kovanavar* and that as the endowments have now increased due to the royal gifts, 10 more persons were selected from all the *kottus* including *kovanavar* to manage the properties. The selected persons are; 2 from *Kovanavar*, 2 from *Bhattakal Srirangamaraiyar*; one from *Totavattumaraiyar;* 2 from *Talai-iduvar*; one from *Vasal Ariyar*; 2 from *Arattamukki Anukkar*; This order said to have been issued at the instance of Sriranga-narayanadasan Kurukulattaraiyan who was incharge of *Srikaryam* officer, *kovanavar* and *kudavar.*

The Second one contains the order issued in the name of the deity dealing with the same type of constitution. Now the members are 23 in number, of whom ten are to be selected from out of *kottus* of the temple, from *Sanyasins* and *desantrins*, 5 representing

18 andalas including Tondaimandalam, and 4 representing the Chera, Chola and Pandya Kings and the Kshatriyas of the north. Ten members from *kottus* were to be selected as one from each Kottu, being enumerated as *1. Kovanavar 2. Kudavar 3. Bhattagal 4. Todavattumaraiyar, 5. Ramananujarai Udaiyar, 6. Paduvar, 7. Talaiiduvar, 8. Poomalai-iduvar, 9. Ariyar* and *10. Sripundarikar*

Further this record proceeds to say that some of these selected persons who observe the code of conduct and are familiar with the hymns of Sadagopan (Nammalvar) and Kaliyan (Tirumangai alvar) may be appointed as *ekankis*. They are then ordered to select an ascetic from among the residents of Pangayachchelviyur alias vellarai, Parantaka chaturvedimangalam alias Saligramam, and Nalayiravar Brahmadesam in Pandi-mandalam, who is endowed with knowledge and conduct, and who is well versed with Itihasa-Puranas and appoint him as the leader of the committee who should be honoured as the gods *Senapati* is honoured. The rates of payments for all of them are also laid down.

These inscriptions are the clear evidences for the constitution of various committees, represented by many group of servants to look after the day to day affairs as well as execution, management and protection of all the properties, both movable and immovable.

Text

1) ஸ்வஸ்வதிஸ்ரீ.

ஸ்வஸ்தி ஸமஸ்தஜகதாதார, ஸோமகுலதிலக, மதுராபுரிமாதவ, கேரள வம்ச நிர்ம்மூலந, லங்காத்வீபலுண்டந, த்விதீயராம சோளகுலசைல குலிச கர்ணாட ராஜவித்ராவண, காங்ககரிகூடபாகல விவிதபுரிதுர்க்கமர்த்தந, வீரகண்ட கோபால விபிநதாவதஹந, புரவராதீஸ்வர கணபதிஹரிண, சார்த்தூல நெல்லூரு புரவீரசித, வீராபிஷேக ப்ரணதராஜ, ப்ரதிஷ்டாபக, மஹாராஜாதிராஜ, ஸ்ரீகோச்சடப்பன்மரான திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீசுந்தர பாண்டிய தேவற்கு யாண்டு பத்தாவது புரட்டாதி மாதம்

கோயில் திருப்பதி ஸ்ரீ வைஷ்ணவர்கள் கொத்தில், பதிமு செய்து போந்த இது அனத்துக்கொத்துகளிலுமாக இட்டு காரியங்கள் குறையற நடத்துவதாக

பெருமாள் திருமுகம் வருகையாலே இப்படிக்கு பெருமாளுக்கு விண்ணப்பஞ் செய்து, செய்த படிக்கு இட்டருளின நினைப்புக்கு கல்வெட்டு

திருப்பள்ளி அறையில் பூபாலராயன் சிம்ஹாசனத்து நாச்சிமாரோடும் எழுந்தருளி இருந்து செய்ய திருவாய் மொழிந்தருளினபடி நம் வீட்டு காரியங்களும், அடுக்களைப் புறக்காரியங்களும், நாமுகந்த வீடுகளும், தோப்புகளும், காரியங்களும், நம்முடையர் காரியங்களும் நம் வீட்டுக் கோவணவர் கொத்திலே, பத்துப்பேராய் ஆராய்ந்து போந்த இதுக்கு நம் சுந்தரபாண்டியன் நம் வீட்டு காரியங்கள் விரிய இட்டு, அடுக்களைப் புறங்களும் தந்து, ...ல்விகளும், கண்ணாலமுமா....கோயில் ஸ்ரீரங்க விமாநம் முதலான பல விமாநங்களும் சுந்தரபாண்டியன் மதிளும், கோபுரமும், பொன் மேவித்து நமக்கு பூண ஒருபடியாக ஆபரணங்களும் ஏறச் சிவிகையும், ...ச்சிகையும், பல பொற்பணிகளும் செய்விக்கையாலே

இவை நோக்க காரியங்கள் செய்யுமிடத்து, அனைத்து கொத்துகளிலும் உள்ளாரிலே பத்துபேராய் நின்று நோக்கிச் செய்வதாக நிச்சயித்து இப்படிக்கு தன் ஓலை வரக்காட்டினன் என்றும், இதுக்கு முன்பு காரியங்கள் செய்து போந்த கொவணர்கள் கொத்திலே இரண்டு பேரும் நம் பட்டகள் ஸ்ரீரங்கமறையோர் கொத்திலே இரண்டு பேரும், நம் சபையார் தோதவத்து தூமறையோர் கொத்திலே இரண்டு பேரும், பூந்தோட்டம் செய்யும் அறட்டமுக்கி அணுக்கர் கொத்திலே இரண்டு பேரும் ஆக பத்துபேராய் நின்று காரியங்கள் ஆராய்ந்து குறையற நடத்துவர்களாகவும்,

இப்படிக்கு இவர்களுக்கு நம் ஓலைகளும் புறப்பட்டுக் கல்வெட்டக் கடவதாகவும் பெறவேணுமென்று நம் ஸ்ரீரங்கநாராயணதாசனும் வீட்டுக்காரியம் ஆராய்கிற மாத்தூர் கிழவன் குருகுலத் தரையனும், வீட்டு கோவணவரும், குடவரும், நமக்குச் சொன்னமையில் இப்படிகள் செய்யக் கடவதாகவும் பண்ணி, இப்படிகளுக்கு நம் ஓலைகளும் எழுதிக் குடுத்து கல்வெட்டிக் கொள்ளவும் பண்ணுக என்று திருவாய் மொழிந்து அருளினபடிக்கு திருமந்திர ஓலை நாயகம் புதுச்சேரி உடையான் கண்ணுடையான் பல்லவன் விழுப்பரையன் எழுத்து.

2) ஸ்வஸ்திஸ்ரீ.

திருமுகப்படி

ஏதத் திரைலோக்ய நிர்ம்மாண த்ராண ஸம்ஹார காரணம்,

ஸ்ரீமத் ஸ்ரீரங்கநாதஸ்ய சாசனம் சாச்வதம் பரம்

நம் வீட்டுக்காரியம் செய்யும் பேரில் கொவணவர், குடவர், நம் பட்டகள் நம் வாளும் சொட்டையும் எடுக்கும் தோதவத்தி தூமறையோரான உள்ளூரார், நம் ராமாநுஜனை உடையார், நம் பாடுவார், தழை இடுவார், நமக்கு தண்ணீரும் மாலையும் கட்டுவார், நம் வாசல் காக்கும் ஆரியர், நமக்கு விளக்கும் பிடித்து பூத்தோப்புஞ் செய்யும் ஸ்ரீபுண்டரிகர் உள்ளிட்ட கொத்துத்தோறும் ஒருத்தராகப் பத்துப்பேரும் தேசாந்த்ரிகளுக்கு உடலாக சந்நியாசிகளும், சகாக்கள் காராரில் வேஷந்தரித்தவர்களும் உட்பட நாலு பேரும் தொண்டை மண்டலம், சோழ மண்டலம், பாண்டி மண்டலம், மலை மண்டலம் உள் இட்ட பதினெட்டு மண்டலத்துக்கும் உடலாக அஞ்சுபேரும் சேர, சோழ, பாண்டியர்க்கும் உத்தரதிக்கில் க்ஷத்ரியர்க்கும் உடலாக நாலு பேருமாக

இப்படி கூடின இவர்களாசார ப்ரத்தங்களில் குறைமின்றியே நம் காரியத் துக்கு நல்லருமாய் நம் சடகோபன் கலியன் உள்ளிட்டார் பாட்டிலே வாசறை உடையருமானாரை ஏகாங்கிவேசத்துடனே ஆக்கி காட்டிக் கொள்ளவும், இவர்களுக்கு இலக்கைக்கு பேறொன்றுக்கு, னாளொன்றுக்கு பதக்கு நெல்லு, மாசமொன்றுக்கு இரண்டு பணமும் பெறவும் பெறுமிடத்து ஒன்று பாதி இலக்கை நங்கலச் சோற்றிலே பெறவும், னீக்கி உள்ள இலக்கைக்கு பேறொன்றுக்கு அரைக்காலாக வந்த நிலம் நெல்லு நட்டுக் கொள்ள நீக்கிக் கொடுக்கவும்

இந்த வர்க்கத்திலுள்ளாற்கு தலைகண்ணாக நம் பங்கயச்செல்வியூரான வெள்ளறையிலும், பராந்தக சதுர்வ்வேதி மங்கலமாந சாளக்ராமத்திலும், பாண்டி மண்டலத்தில் நாலாயிரவர் ப்ரம்மதேயத்திலும் உள்ளவர்களிலே அபிஜநவித்யாவ்ரதங்களில் குறை அற்று மிகுதி உடையருமாய் நமக்கு நல்லருமாய் இதிகாசபுராணங்களிலே வாசறை உடையருமாய் நங்காரியத்துக்கு அறிவுமுடையராயிருப்பானாரு ஸந்யாசியைக் கூட்டிக் கொள்ளவும்

இக்காரியத்துக்கு நம் வீட்டுவாசல் விடாமல் நிரந்தரராநாரிலே இம் மரியாதியுடைய ஸந ஸந்நியாசி உண்டாகிலும் இப்படிக்கு கூட்டிக் கொள்ளவும் இப்படி தலைகண்ணாக இருந்து போதும் ஸந்யாசியை நம் சேனாபதியை ப்ரதிபத்தி பண்ணுமாப்போலே பண்ணவும், இவர்கள் நங்காரியம் நாள்தோறு மிருந்தாராகவும், நம் மலை வீடுகள் முதலாக நாம் விரும்பிப் பொதுமிடங்களிலுள்ள மிகுதிச்சுருக்கங்களுக்குள்ளார் வந்தறிவித்த காரியங்கள் கேட்டு அதுக்கீடான காரியங்கள் செய்யுமளவில்

நம் வீட்டையடுத்த நாடும், நகரங்களும், கிராமங்களுமகரங்களும். நம்மை உள்ளபடி அறிவாரும், செட்டிகளும்; மலையாளரும் நம் பெண்டு களுடைய அகம்படியானவர்களும் மற்றும் வேண்டுவாருஞ் சுரவித்துறை யிலுள்ளாருங் கூடி விசாரித்து அவ்வொ காலங்களுக்கு தக்கவாறு காரியமாக செய்விக்கவும்

ஆஞ்ஞைகுக் காரியங்களுக்கு உடலாக ஆயுதபாணியான வேளைக்காறரில் வேண்டுவாரையுங் காரியம் போக்க வேண்டுவாரையுங் கூட்டிக்கொள்ளவும் இவர்களும் இப்படி இலக்கை பெறவும் இம் மரியாதையைத் தப்பக் காரியங்கள் செய்தல் வந்தது வா வார்த்தை சொல்லுதல் செய்தா ருண்டாகில் நம் வீடுகளான இடங்களிற் புகுதாதபடி தீரச் செய்யவும் இக்காரியங்களுக்கு நாம் எழுதின ஓலைப்படியே கல்லிலுஞ் செம்பிலும் வெட்டுவிப்பது.

---- x -----

Due to agricultural expansion, new settlement of people also emerged, since, temples were the economic centres, which owned plenty of lands. Besides this, more and more rituals and festivals were introduced and almost every section of the society was connected someway or other to the temples. The Kings showed much interest in the temple activities and appointed number of persons to perform the multifarious functions there. Some settlements were newly created or altered and they were donated to the group of learned brahmins, who were wellversed in *Vedas* and *sastras*. Sometimes already settled villages partly or fully were donated to them with or without the working peasants. They were called as *chaturvedimangalas*, named usually after the king who created them or after the deity. Such type of settlements were administered by those brahmins by forming *sabhas* of their own.

The famous Karantai Copper plate is a fine example, which records the formation of *chaturvedimangalam* and donation to 1080 brahmins. Many inscriptions also record such type of formation and donation. A sample follows:

Select Inscriptions   Serial No: II : 6

District:	*South Arcot*	**Dynasty:**	*Pandya*
Taluk:	*Tirukoyilur*	**King:**	*Sundara Pandya-I*
Village:	*Tirukoyilur*	**Regnal Year:**	*18*
Language:	*Tamil*	**Historical Year:**	*1268 A.D.*
Script:	*Tamil & Grantha*	**Earlier Publication:**	*ARE - 1902, No. 307, S.I.I-Vol. VII, No. 936*

Location : On the north wall of the *prakara* of the TRIVIKRAMA TEMPLE.

Summary:

The subjoined record is of the sanction of the King's grant made to 24 *bhattas* as *chaturvedimangalam* in the name of the deity Varata nayaka. This newly formed *chaturvedimangalam* consists of 27 shares, among which 24 were given to the *chaturvedi bhattas*, one to the Siva temple called Srikailasam, one to the Vishnu temple called Tirumerkoil and the last one to a physician.

The boundaries of the land are elaborated and it is also stated that the lands already donated as *devadana, tiruvidai-yattam, pallichandam* and *bhattavritti* had to be excluded. The grains harvested and the taxes to be collected on them were all donated to the above 27 share holders. Also officials were ordered to engrave this document both in stone and copper.

Text

ஸ்வஸ்தி ஸ்ரீ. திரிபுவனச்சக்கரவத்தி கோனேரின்மைகொண்டான் நடுவில் மண்டலத்துப் பெண்ணை வடகரை மலாடாகிய ஜநநாத வளநாட்டுக் குறுக்கைக்கூற்றத்து திருக்கோவலூர்ப்பற்றில் நெற்குன்றத்துக்கு மேற்கான வரதநாயகர் சதுர்வேதிமங்க மங்கலத்து பட்ட(ர்)களுக்கு*

சதுர்வேதிபட்ட(ர்)கள் பேர் இருபத்துநாலுக்கும், ஸ்ரீகைலாசத்துக்கு பாகம் ஒன்றும், திருமேற்கொயிலுக்கு பாகம் ஒன்றும், வைத்யபாகம் ஒன்றும் ஆக பாகம் இருபத்தேழுக்கு இறையிலிஆகத் தந்த நிலமாவது*

இப்பற்றில் தென்கரை திருக்கோவலூர் பெரியேரி(க்*)கிழ் புதுப்பற்றில் கீழ்கூறும் முவராயர் அகரத்துக்கு விட்ட நிலத்துக்கு கிழக்கும், வீரட்டர் அகரத்துக்கு விட்ட நிலத்துக்கு தெற்க்கும், ஆவியூர் எல்லைக்கு மேற்க்கும் கச்சிக்குவாச்சான் எல்லைக்கு வடக்கும், ஆக நான்கெல்லைக்கு உட்பட்ட நிலமும் புன்செய் நிலத்துக்கு திருக்கோவலூர் எல்லைக்கு கிழக்கும், மழவராயர் அகரத்துக்கு விட்ட நிலைத்துக்கு தெற்க்கும், இவ்வெல்லைக்கு மெற்க்கும் கிழக்கும் தேவங்குடி எல்லைக்கு மேற்க்கும், கச்சிக்குவாச்சா னெல்லைக்கு வடக்கும் ஆக நான்கெல்லைக் குட்பட்ட புன்செய்நிலமும் ஆக இந்நிலங்களில் முன்பிலாண்டு வரையுமனுபவித்துப் போந்த பலதளி தேவதானம், திருவிடையாட்டம், பள்ளிச்சந்தம், பட்டவ்ருத்தி உள்ளிட்ட நிலங்கள் நீக்கி நான்கெல்லைக்குட்பட்ட நஞ்செய் புஞ்செய்யும் மழவராய ரகரத்து நத்த(ந்) நீங்கலான நத்தங்களும் இவையிற்றுக்குள்ப்பட்ட மரங்கள் கிணறுகள் குளங்கள் ஏந்தல்கள் ஆற்றுக்கால் கண்ணாறுகள் வாய்க்கால்கள் உள்ளிட்ட ப்ராப்திகளும்

இந்நிலங்கள் கார்பாசானம் சித்திரைக் கார்மறு நவிரைக் கரும்பு கொழுந்து செங்கழுநீர் உள்ளிட்ட பயிர்களும், வாழை வழுதிலை இஞ்சி மஞ்சள் கருணை சிறுகிழங்குள்ளுட்ட வான்பயிர்களும், தெங்கு கமுகு மாப் பலா உள்ளுட்ட தண்டலைகளும், வரகு கேழ்வரகு பயறு பருத்தி ஆமணக்குள் ளுட்ட புன்பயிர்களும் செய்வித்துக்கொள்ளவும்

இந்நிலங்களில் வரும் கடமை, பொன்வரி, காணிக்கை, வினியோகம், காசாயவற்கம், காத்திகைப்பொன், காத்திகைப்பச்சை, தறியிறை, செட்டிறை செக்கிறை, தட்டொலி, தட்டாரப்பாட்டம், ஏர்வரி, இனவரி, இடைவரி, மனைவரி, ஆயம், கிற்று, பஞ்சுபீலி, சந்துவிக்கிரகப்பேறு, காணியாட்சிப் பேறு, சாமுதாயப்பேறு, காடுகாவல், பட்டினிப்பகுதி, கொற்றிலக்கை, கடைக்கூட்டிலக்கை, விடைப்பேர், மாதப்படி த(ண்) கூலி, சம்மாதம், வாசல்வினியோகம், எழுத்துவினியோகம், அரிசிகாணம், வாசல்வரி, தலைப்பணம், நற்பசு, நல்லெருது, நற்கிடா, கொணிகை, கவந்திகை, பிள்ளையார்நோன்புப்பச்சை ஆக பொதுமக்களைக் கொள்ளும் வரி, எண்ணைப்பந்தம் உள்ளுட்ட இறைகளும், ஆனைச்சாலை, குதிரைப்பந்தி, வீட்டுத்தேவை, மதிட்தேவை, தச்சருள்ளுட்ட கண்மாளர் தேவைகளும் உள்ளுட்ட இறைகள் உபாதிகள் தேவைகள் இவையும் இழந்து பழங்காணி ஆளரையும் தவிர்த்து

இவ்வாழ்வார் ஆனி அனிழத்திருநாளுக்கு திருக்கொடிப்புடவையுள்ளிட்ட அற்றைநாள்வரை அழிவுக்குப் பொன்கழஞ்சும், திருவிளக்கெண்ணை நாள் ஏழுக்கு பொன் இரு கழஞ்சும், இந்நாளில் சேவிக்கும் வையிஷ்ண வர்க்கும், தாதர்களுக்கும்ஆக உண்பார் ஆயிரவர்க்கு நாள் ஏழுக்கு நெல் அறுபதின் கலமும், இவ்வாழ்வார் கிராமபிரதக்ஷிணத்துக்குத் திருத்தேர் ஏறி அருளுநாள் இயாசகர்க்கு தியாகத்துக்கும் பிரசாதிக்கும் பரிசட்டங் களுக்கும் பொன் ஐங்கழஞ்சும், சாத்தியருளு திருப்பரிசட்டம் இரண்டுக்கு பொன் கழஞ்சும் உற்சவத்து ஐந்து பெருந்திருவமுதுக்கும் உத்தமபடிக்குத் திருமஞ்சனத்துக்கும் பொன் அரைக்கழஞ்சும், திருப்பள்ளித் தாமத்துக்குப் பொன்அரைக் கழஞ்சும்ஆக இத்திருபிரஸ்தத்துக்கு கொண்டருளின நிலம், இவ்வாறாங் கண்ணாற்று மூன்றாஞ் சதுரம் அரையே விரண்டு மாவும்,

இவ்வூருடைப் பெருமாள் முன்பமுது செய்தருளுகிறபடி பங்கு நாலில் அரிசி குறுணி நாநாழி ஏற்றி போது குறுணி நாநாழியாக அரிசி தூணி நானாழியும், வீற்றிருந்தார்க்கு பங்கு ஐஞ்சும், தேசாந்திரிகளுக்கு பங்கு நான்நாளுக்கு போது அரிசி நாநாழி அமுது செய்தருளவும்,

இவ்வூரிலிப் பெருமாள் உடையார் ஸ்ரீராஜேந்திரசோழதேவர் உத்தர பத(த) பூபதியரை ஜயத்தருளி யுத்தோத்சவ விபவத்தால் கங்(க்ரா)காபண்ணி யருளின கங்கைகொண்டசோழன் என்னும் திருநாமத்தால் இத்திருமுற் றத்தின் வைத்தருளின உத்தமாக்ரம் கங்கைகொண்டசோழநில் உண்ணும் அனைத்து வேதமும் அபூர்வமும் ஓதும் பிரம்மச்சாரிகளில், ரிக்வேதம் ஓதுவார் எழுபத்தைஞ்சும், யஜுர் வேதம் ஓதுவார் எழுபத்தைஞ்சும், சந்தோகார சாமத்துக்கு இருபதும், தலவகார சாமத்துக்கு இருபதும், வாஜசனையத் துக்கு இருபதும், அதர்வத்துக்கு பத்தும், பௌதாயநீயம் க்ருஹ்ய கல்பமும் காடகமும் ஓதுவார்க்கு பத்தும், அபூர்வம் ஓதும் பிரம்மச்சாரிகள் இருநூற்று முப்பதின்மரும், ரூபாவதாரம் கேட்பார் நாற்பதின்மரும், ஆக இருநூற்று எழுபதின்மர்க்குக் கலம் ஒன்றினுக்கு நெல்லு அறுநாழியும்,

வ்யாகரணம் கேட்பார் இருபத்தைஞ்சும், ப்ரபாகரம் கேட்பார் முப்பத்தைஞ்சும் வேதாந்தம் கேட்பார் பதின்மராக ஓத்துக் கேட்கும் சாத்ரகள் எழுபதுக்கும் கலம் ஒன்றினுக்கு நெல்லுக் குறுணி இருநாழியும்,

வ்யாகரணம் வக்காணிக்கும் நம்பிக்கு நாள் ஒன்றுக்கு நெல்லுக் கலமும் ப்ரபாகரம் வக்காணிப்பார் ஒருத்தர்க்கு நெல்லு கலனே தூணியும், வேதம் அபூர்வம் ஓதுவிப்பார், ரிக்வேதத்துக்கு மூவரும், யஜுர் வேதத்துக்கு மூவரும்,

சாந்தோகசாமத்துக்கு ஒருவனும் தலவகார சாமத்துக்கு ஒருவனும், வாஜசனேயத்துக்கு ஒருவனும், பௌதாயனீய ஹ்ருஹ்யமும் கல்பமும் காடகமும் ஓதுவிப்பான் ஒருவனுக்கும் ஆக ஓதுவிப்பார் உபாத்யாய....... ரூபாவதாரம் வக்காணிப்பான் ஒருவநுக்கு நெல்லு முக்குறுணியும் ஆக நாள் ஒன்றுக்கு நெல்லு ஸ்ரீராஜராஜன் மரக்காலால் மு(மு)ப்பதின் கலத்துக்கு ஆண்டுவரிநாள் முன்னூற்றறுபதினுக்கு நெல்லு பதினாயிரத்து ஐஞ்ஞூற்றிறுபது கலமும், வ்யாகரணம் வக்காணிப்பார்க்கு அத்யாயத்தால் ஓர் முடிவக்காணித்தால் பொன் கழஞ்சாகப் பொன் அஷ்டாத்யாயத்துக்கு பொன் எண் கழஞ்சும், மீமாம்சை வக்காணிப்பானுக்கும் அத்யாயத்தால் பொன் கழஞ்சாக த்வாதசாத்யாயத்துக்குப் பொன் பன்னிருகழஞ்சும், வேதம், அபூர்வம் ஓதுவிக்கும் உபாத்யாயருள்ளிட்ட பத்தனிருவர்(வர்)க்கும், ரூபாவதாரம் கேள்விப்பான் பேரால் பொன் அரைக்கழஞ்சாகப் பொன் அறுகழஞ்சும், வ்யாகரணமும் மீமாம்சையும் வேதாந்தமும் கேள்க்கும் சாத்திரர் எழுபதின்மர்க்குப் பேரால் பொன் அரைகழஞ்சாகப் பட்ட முதல் பொன் முப்பத்தைங் கழஞ்சும் ஆகப் படிமுதல் பொன் அறுபத்தொரு கழஞ்சுக்கும் கொ(கொ)ண்ட நிலம் பிடாகை ராஜராஜ வளநாட்டாடு ஆனாங்கூரான ராஜராஜநல்லூரோடு மடைந்த மாம்பாக்கச்சேரியான பவித்திரமாணிக்க நல்லூரி(ல்)லும் மேல்க்கடலூரான புருஷோத்தமன் நல்லூரி(ல்)லும் இவ்வாழ்வார் கொண்டருளின நிலம் நாற்பத்தை வேலியு மாவது,

ஸ்ரீபஞ்சவன் மாதேவி வதிக்குக் கிழக்கும், சண்டேசுவரர் வாய்க்காலுக்குத் தெற்கும் திரிபுவன மாதேவிச் சதுர்வேதி மங்கலத்து எல்லைக்கும் கள்ளக் குத்தூர் எல்லைக்கும் ஆக இவ்விரண்டூர் எல்லைக்கு மேற்கும் அரிஞ்சயப் பேராற்றின் தென்கரைத்துண்டும் அகப்பட முஞ்சாற்றுக்கு வடக்கும் நடுவுபட்ட நிலத்தில்(தில்) இவ்வாழ்வார் (வா)ண்டானிடை தன்மம் சட்டி விலை கொண்டருளின நிலம் நாற்பத் (நாற்பத்)தை வேலி யிலுமும்(மும்) பவித்ரமாணிக்க நல்லூரிலும் புருஷநாராயண நல்லூரிலும் குடிஇருந்து இந்நிலமு(மும்) குடிகளை வெட்டி அமஞ்சி உள்ளிட்ட உழவிறை சட்டி மாதூணி மாப்பதக் கல்தது மற்றொன்றும் காட்டப் பெறாறென்று திருஆணை குறி உடையார் ஸ்ரீராஜேந்திரசோழ தேவர்

திருவாய் மொழிந்தருள, நம்மூர் பரிபாலிக்கின்ற காளிஏகாம்ரநாரும் இருக்க

இப்பரிசு செய்தோம் மஹாசபையோம். கரைபோந்து பணித்து ஸ்ரீசுந்தர சோழச் சேரி வெண்ணிச்செட்டு கணஸ்வாமி க்ரவித்தப் பணியால் ஸ்ரீ செம்பியன்மாதேவிச்சேரி மத்யஸ்தன் திருவேங்கடமான கருணாகர ப்ரியனேன். இதன்மம் தென்சேரி ஸ்ரீவீரநாராயணச் சதுர்வேதிமங்கலத்தார் ரக்ஷை.

Ennayiram - Rajendra - I

S. No.	Subjects Taught	Number of Teachers			Number of Students		
		No.	Daily Allowance (paddy)	Renume-ration (gold)	No.	Daily Allowance (paddy)	Stiphend (gold)
1.	Rigveda	3			75		
2.	Yajurveda	3			75		
3.	Chandoga Sama	1			20		
4.	Talavakarasama	1			20	6 nali	
5.	Vajasaneya	1	3 kuruni	½ kalanju per head	20		
5.	Atharvaveda	-			10		
6.	Baudhayana-Grihya Kalpa & Garakam	1			10		
7.	Rupavarara	1		–	40		
8.	Vyakarana	1		8 kalanju for 8 adyayas	25	1 kuruni & 2 nali	½ kalanju
9.	Prabhakara	1	One kalam	12 kalanju for 12 adhyayas	35		

Tribuvani - Rajadhiraja - 1048 A.D.

S. No.	Subject Taught	Number of Teachers		Number of Students	
		Nos	Daily Allowance (paddy)	Nos	Daily Allowance (paddy)
1.	Rigveda	3	1 tuni	60	6 nali
2.	Yajurveda	3	"	60	"
3.	Chandogasamaveda	1	"	20	"
4.	Talavakara-Samaveda	1	"		"
5.	Apurva	1	"		"
6.	Vajasaneya	1	"	50	"
7.	Budhayanya	1	"		"
8.	Sathushata sutra	1	"		"
9.	Vedanta	1	1 kalam & 1 patakku		
10.	Mimamsai		1 kalam	70	"
11.	Vyakarana	1	2 tuni & 1 Kuruni		
12.	Rupavatara	1	1 tuni & 1 patakku		"
13.	Sri Bharata	1	2 tuni & 1 kuruni		"
14.	Ramayana	1			"
15.	Manu-Sastra	1	1 tuni		"
16.	Vaikhanasa Sastra	1	3 kuruni		"

Hospital

Since temples were the centres of all the activities of the society, its funds were utilised for multifarious welfare measures of the community. Many references are there for the maintanence of the hospitals in the temple premises. While forming each *Chturvedimangalam,* one share had been allotted to physician as *'Vaidyavritti'*. Both general physicians and surgeons were referred in many of the records named as *'Vaidyanseyvar'* and *'Salliya kriyai pannuvar'* respectively. Most of them had the surname *'Savarna'*. Sundara cholan *aturasala* was established by Kundavai Nachchiyar at Tanjavur. At Srirangam also one

hospital *(Arokyasala)* was reestablished by one Srinivasa alias Sriranga Garuda Vahana Bhatta in Saka 1415 which was originally established in the 3rd regnal year of ViraRamanatha (1257 A.D.) by his ancestor by name Garudavahana-Bhatta and damaged during the *vanam.* Originally the endowment was made by investing 1100 *varahan pon* on land and from which the doctor in charge of the hospital would be paid a daily allowance of 5 kuruni of paddy, his assistant and colleague 3 kuruni and two men attendents *(vaidyaparisarakar)* 1 tuni and 1 *padakku* each, and medicines to the value of 100 *kasu* per day. He installed the image of the deity Dhanvantri Emberuman, who was considered as God of medicine. It is also interesting to note that the arrangements were made to offer *kudinir-amudu (kashaya)* to Lord Ranganatha. The subjoined inscription is the most important as it contains eloborate details about the hospital *(adulasala).*

Select Inscriptions **Serial No: V : 3**

District:	*Chengleput*	***Dynasty:***	*Chola*
Taluk:	*Madhurantakam*	***King:***	*Virarajendra*
Village:	*Tirumukkudal*	***Regnal Year:***	*5*
Language:	*Tamil*	***Historical Year:***	*1068 A.D.*
Script:	*Tamil*	***Earlier Publication:***	
		ARE - 1916, Intro. p. 119	
		E.I. - Vol XXI, No: 38.	

Location : On the east wall of the first *prakara* of the VISHNU TEMPLE OF VENKATESA PERUMAL

Summary:

It records the grant of 75 *kalanju* of gold which was usually paid by the residents of Vayalaikkavur but now stopped for unknown reason. For the upkeep of the *sala* on the representation made by many dignitaries the king granted the same, along with the taxes of that village, for the expenses of the temple of Mahavishnu at Tirumukkudal. They amounted to 147 *Kalanju* and 216½ *kasu* and 2 *ma* which were assigned for the several services in the temple, and to celebrate two festivals one in the

month of *Avani* on the day of *Ayilya* and another in the month of *Kartikai* on the day of *Purada*. In addition to that it was also used for the maintence of a school with hostel and a hospital which were functioning in Jananatha *mandapa* of that temple. The hospital was named as Virasolan and was provided with 15 beds. The facilities available in the school and hospital are as follows:

S. No.	Subject Taught	Teachers			Students	
		Numbers	Daily Allowance paddy	Remune-ration gold	Numbers	Daily Allowance paddy
1.	Rigveda	1	1 *padakku*	4 *kasu*	10	1 nali & 1 uri
2.	Yajurveda	1			10	"
3.	Vyakarana	1	1 *tuni*	10 *kasu*	20	"
4.	Rupavarara	1				
5.	Pancharatram	—	—	—	10	
6.	Saiva Agama(?)	Sivabrahmana-3	1 *nali* & 1 *uri*	—	—	"
7.	Vaishnava Agama(?)	Vaikanasar-5			—	—
8.	-	2			—	

Hostel

Persons	Nos	Daily Allowance	Provisions
1. Student	35	2 *kasu*	Mats to sleep 35 Nos
2. Inmates		2 *nali*	Oil for Saturday bath
3. Female attendents	2	2 *ulakku*	Night lamp 13

Staff		Allowance
1. A doctor named Savarnan Kodandaraman Asvattama Bhattan	-	3 kuruni perday
2. Surgeon	-	1 kuruni per day
3. 2 persons for fetching medicine, supplying firewood and to do other helps	-	1 kuruni & 1 kasu, each
4. 2 female nursing assistants	-	4 nali and ½ Kasu each
5. One barbar for assisting patients, students, and inmates	-	4 nali per day
6. Rice for inpatients	-	1 nali per day each

Provision was made for burning a lamp for the whole night.

Provision made for stocking the medicines required for one year are:

Brahmyam Kadumburi	-	1 No
Vasa-haritaki	-	2 padi
Dasamula-haritaki	-	1 padi
Bhallataka-haritaki	-	1 padi
Gandiram	-	1 padi
Balakeranda - tailam	-	1 tuni
Panchaka-tailam	-	1 tuni
Lasunaka-eranda tailam	-	1 tuni
Uttamakarnadi-tailam	-	1 tuni
...........ghritam	-	1 padakku
Bilvadi ghritam	-	1 padakku
Mandukara vatakam	-	2000 Nos.
Travatti	-	1 nali
Vimalai	-	2000 Nos
Sunerri	-	2000 Nos
Tamrathi	-	2000 Nos
Vajrakalpam	-	1 tuni and 1 padakku
Kalyana-lavanam	-	1 tuni and 1 padakku

Staff		Allowance
1. A doctor named Savarnan Kodandaraman Asvattama Bhattan	-	3 kuruni perday
2. Surgeon	-	1 kuruni per day
3. 2 persons for fetching medicine, supplying firewood and to do other helps	-	1 kuruni & 1 kasu, each
4. 2 female nursing assistants	-	4 nali and ½ Kasu each
5. One barbar for assisting patients, students, and inmates	-	4 nali per day
6. Rice for inpatients	-	1 nali per day each

Provision was made for burning a lamp for the whole night.

Provision made for stocking the medicines required for one year are:

Brahmyam Kadumburi	-	1 No
Vasa-haritaki	-	2 padi
Dasamula-haritaki	-	1 padi
Bhallataka-haritaki	-	1 padi
Gandiram	-	1 padi
Balakeranda - tailam	-	1 tuni
Panchaka-tailam	-	1 tuni
Lasunaka-eranda tailam	-	1 tuni
Uttamakarnadi-tailam	-	1 tuni
...........ghritam	-	1 padakku
Bilvadi ghritam	-	1 padakku
Mandukara vatakam	-	2000 Nos.
Travatti	-	1 nali
Vimalai	-	2000 Nos
Sunerri	-	2000 Nos
Tamrathi	-	2000 Nos
Vajrakalpam	-	1 tuni and 1 padakku
Kalyana-lavanam	-	1 tuni and 1 padakku

Provisions were made for the preparation of the above mentioned drugs and cow's ghee to prepare *'Purana Sarpi'*. The medicated water prepared with *cardamam* and *ilamichai* was also provided to the patients, students and others who were fed in the *'salai'*.

Text

ஸ்வஸ்திஸ்ரீ (மெய்க்கீர்த்தி உள்ளது)

வீரத்தனிக்கொடி தியாகக்கொடியொடு மேற்பவர் வருகென்று நிற்ப கோத் தொழிலுரிமையிநெய்தி அரைசு வீற்றிருந்து மேவருமனுனெறி விளக்கிய கோவிராஜகேசரிவன்மரான முடையார் ஸ்ரீவீரராஜேந்திரதேவர்க்கு யாண்டு அஞ்சாவது கங்கைகொண்டசோழபுரத்துச் சோழகேரளந் திருமாளிகையில் ராஜேந்திரசோழ மாவலிவாணராஜநில் எழுந்தருளி யிருந்து

ஜயங்கொண்டசோழ மண்டலத்துக் களத்தூர்க் கோட்டத்துத் தனியூர் ஸ்ரீமதுராந்தக சதுர்வேதி மங்கலத்துத் திருமுக்கூடல் மஹா விஷ்ணுக்கள் தேவதானமாய் வருகின்ற காலியூர்க் கோட்டத்துத் தேரோடு பருவூர் நாட்டு வயலைக்காவூர(க)கள் சாலைக்கிறுத்து வருகின்ற பொந் எழுபத்தைங் கழஞ்சும் இச்சாலைக்குச் சாலாபோகமாய் வருகின்றபடி இரட்டப்பாடி யேழரையிலக்கமுங் கொண்டு ஆஹவமல்லனையிருமடி வெந்கண்டு உலகு(ய்)யக் கொண்டருளின தேவற்கியாண்டிரண்டாவது முதல் தவிர்ந்து வெள்ளான் வகையில் முதல் எடுத்து இப்பொன் எழுபத் தைங்கழஞ்சும் இவ்வூரால் வந்தவூர்க்கழஞ்சுங் குமரக்கச்சாணமும் வண்ணாரப் பாறை(யு)ம் மீன்பாட்டமுந் தட்டாரப்பாட்டமுமுள்ளிட்ட கீழிறைப்பாட்டமும் வேலிக்காசுந் திங்கள்மேரமும் முத்தாவரணமும் தறிப்புடவையும் வலங்கையிடங்கைமகண்மையுந் தசபந்தமு(ம்*) மாடைக் கூலியும் வீரசேழையுமுள்ளிட்ட பாட்டங்களுட்படத் திருமுக்கூடல் மஹாவிஷ்ணுக்களுக்கு . வேண்டு(ம்*) நிமந்தங்களுக்கிருப்பதாக யாண்டைஞ்சாவது தேவதான முதல் தேவதான இறையிலியாக வரியிலிடத் திருவாய் மொழிந்தருளினாரென்று*

திரு(ம)ந்திரவோலை க்ஷத்திரிய சிகாமணி வளநாட்டுப் பனையூர் நாட்டு நேர்வாயில் நேர்வாயிலுடையான் தாழி திருப்பனங்காடுடையானான வானவந் வல்லவரையனெழுத்திலுந் திருமந்திரவோலை நாயகம் பாண்டிய னாரும் ராஜராஜ பிரம்மமாராயரும் வீரராஜேந்திர காங்கையராஜன் ஒப்பினாலும் புகுந்த கேள்வி வரியிலிட்டுக் கொள்கவென்று வில்லவராஜருங் கலிங்கத்தரையரும் விடையில் ராஜேந்திரவயிராகரச் சோழரும் பாண்டிய

னாரும் இவ்வோகளேவினபடியே யுடந்கூட்டத்து அதிகாரிகள் வீர ராஜேந்திர பிரம்மாதிராஜருஞ் சோழ ப்ரம்மாராயருஞ் செம்பியன் சித்தி ராஜரும் அதிசயசோழ மூவேந்த வேளாருஞ் ஜயங்கொண்டசோழ விழுப்பரையரும் உத்தமசோழப் பல்லவரையரும் விடையிலதிகாரிகள் காடவராஜருங் காவேரிவல்லப மூவேந்த வேளாரும் ஈலாடத்தரையருஞ் சோழ மூவேந்தவேளாரும் வீரராஜேந்திர மழவராஜரும் வளவன் மூவேந்த வேளாரும் ராஜஉத்தம மூவேந்த வேளாரும் ராஜராஜக் கடிகைராஜருஞ் ஜயங்கொண்டசோழ மூவேந்தவேளாரும் ராஜேந்திரசோழ அணுக்கப் பல்வரையருஞ் ஜயங்கொண்டசோழ வயநாட்டரையருஞ் ஜயங்கொண்ட சோழச் சேனாமுக மூவேந்தவேளாரும் சோழ விழுப்பரையருஞ் ஜயசிங்க குலகால விழுப்பரையரும் வீரராஜேந்திரத் திருவிந்தளூர் நாட்டு மூவேந்த வேளாரும் ராஜராஜ விழுப்பரைய வீரராஜேந்திர வரகுணராஜரும் க்ஷத்திரிய சிங்க மூவேந்த வேளாரும் உத்தமசோழ மூவெந்தவேளாரும் பார்மன்னு குலதீப மூவேந்த வேளாரும் இரட்ட குலகால மூவேந்த வேளாரும் உத்தம பாண்டிய மூவேந்த வேளாரும் வீரசோழப் பல்லவரையருந்........ண....... ரி....... மூவேந்தவேளாரும் முடிகொண்டசோழ மூவேந்தவேளாரும் வளவராதித்த மூவேந்த வேளாருங் கங்கைகொண்ட சோழப் பல்லவரையருந் நடுவிருக்கும் உறுப்பட்டூர் யஞ்ஞபட்டருங் சாவ்யண சிவ(லா)ஜ்ஜாதி பட்டருங் கறிபுறத்துச் சோழதேவ பட்டருங் கறிப்புறத்து அநந்தனாராயண பட்டருமேவ

புரவுவரி திணைக்களத்துக் கண்காணி குலைய திவாகர மூவேந்தவேளாரும் அரிந்தமன் புரங்கரம்பை நாட்டு மூவேந்தவேளானும் ராஜராஜச்சென்னி நாடு கிழவனும் வீரசிங்க மூவேந்தவேளானும் அழகியசோழ விழுப்பரை யனும் புரவுவரிதிணைக்களஞ் சளுக்கி குலகால மூவேந்தவேளானும் வானவன் விழுப்பரையனும் வளவராஜ மூவேந்தவேளானும் அவனிநாராயண மூவேந்த வேளானுஞ் சிங்களாந்தக மூவேந்தவேளானும் வரிப்பொத்தகம் பாலையுங் கிழவனும் முகவெட்டி ஜயங்கொண்ட சோழத் தாமனூர்நாட்டு விழுப்பரையனும் ஆதமங்லமுடையானும் அதிராஜேந்திரப் பல்லவரை யனுங் கூந்தல் கிழானுந் தெரிப்பு ஈங்கைக்குடையானும் மாத்தூருடையானும் வளவசூளாமணி மூவேந்தவேளானும் தரவுசாத்து சோழதிவாகர மூவேந்த வேளானும் புலிகிழானும் வரியிலிடு அவனி(ப)ால மூவேந்தவேளானும் செம்பியன் மிழலைவேளானும் வரிப்பொத்தக கணக்குச் செங்காத்தி மங்கலமுடையானும் வளவன் விழுப்பரையனும் பட்டோலை சிறுபாக் கிழானும் மணற்பாக்கிழானுங் கேள்வி வரியில் இடுவித்த புரவுவரி திணைக்களஞ் சளுக்கி குலகால மூவேந்த வேளானுக் சிங்களாந்தக மூவேந்த வேளானும் முகவெட்டி சோழமார்த்தாண்ட மூவேந்தவேளானுங் கூந்தல்கிழானும் வாசித்தான் வரிப்பொத்தகக் கணக்குச் செங்காத்தி மங்கலமுடையானும் வரியிலிட்டான் சோழமண்டலத்துப் புரவரி திணைக்

களத்துக் கணக்குச் சோழமாணிக்க மூவேந்த வேளானும் பட்டோலை எழுதினான் வீரசோழ னென்மலி நாட்டு மூவேந்தவேளானும் இருந்து

யாண்டைஞ்சாவது நாள் முந்நூற்றுனாற்பத்தெட்டினால் வரியிலிட்ட பொன் எழுபத்தைங்கழஞ்சும் (ம)வ்வூர் அடங்கலுக்கும் வந்தவிப்பாட்டங் களும் முன்பு இத்தேவர் தேவதானமாய் வருகின்ற பொந் எழுபத்திரு கழஞ்சேய் ஒன்பது மஞ்சாடியுமாகப் பொன் கழஞ்சினுக்கு ராஜகேசரியால் னெல்லுப்பதினறு கலமாக வந்த னெல்லு இரண்டாயிரத்து முன்னூற்றைம் பத்தொன்பதின் கலனே பதக்கு முந்நாழி யாழாக்கே முச்செவிடும் இவை யிற்றுக்கு அருமொழிதேவன் மரக்காலாக்கிக் கால்வாசியுங் காலளவு குழியுங் கொற்றளவு வாசியும் உட்பட ராஜகேசரியாற் கலம் அருமொழி தேவன் மரக்காலால் கலனே தூணி னானாழியாக வாசியேறுந்னெல்லு எண்ணூற்றெண்பத்து னாற்கலனேயிருதூணி முந்நாழியாழாக்கும் ஆக வாசியேற்றிய் அருமொழிதேவன் மரக்காலால் னெல்லு மூவாயிரத்திரத்தி ருனூற்று னாற்பத்து முக்கலனே இருதூணிப் பதக்குருநாழியுழக்கே முச்செவிடும் இவ்வூரால் வந்தவூர்க்கழஞ்சு பொன் கழஞ்சுங் குமரக்கச் சாணம் பொன் கழஞ்சும் மீன்பாட்டம் பொந் முக்கழஞ்சேகாலுங் கீழிறைப் பாட்டம் பொந் ஐங்கழஞ்சேமுக்காலுமாகப் பொன் பதினொரு கழஞ்சினால் மாடை பதிநெட்டேயெழுமாவினாற் காசு முப்பத்தாறரையுந் தசவந்தங் காசு இருபத்தெட்டரையே னால்மாவு(ம்*) மாடைக்கூலி காசு இருபத் தைஞ்சே முக்காலே மூன்று மாவும் முதலே செலவு கணக்கின்படி காசு மூன்றும் வண்ணக்கக் கூலிக்குக் காசு ஒன்றரையுந் தரிப்புடவையாற் காசு முக்காலும் முத்தாவரணத்தாற்காசு முக்காலும் திங்கள்மேரத்தாற்காசு ஒன்றையும் வேலிக்காசுக்குக் காசு னூற்றொருபத்தெட்டும் ஆகக்காசு இருநூற்றொரு பத்தாறரையே இரண்டு மாவுக்கு இத்தேவர்கு வேண்டுந் நிமந்தஞ் செய்தபடி

ஆழ்வார்க்குச் சிறுகாலைச் சந்தியொன்றுக்குப் பருப்புப் போனகத்துக்கு அரிசி குறுணிக்கு ஐஞ்சிரண்டாக்கி னெல்லுப்பதக்கு னாநாழியும் பருப்பு னாநாழிக்குப் பயறு குறுணிக்கு னெல்லுப்பதக்கும் புழுக்குக் கறியமு தொன்றுக்கு னெல்லு னாநாழியுந் னெய்யமுதாழாக்குக்குனெல்னாழியும் உப்பாழாக்குக்கு னெல்லுழக்கும் அடைக்காயமுது வெறுங்காயஞ்சுக்கு னெல் னாழியும் வெற்றிலையிருபத்துக்கு னெல் உரியுமாகச் சந்தியொன் றுக்கு னெல் ஐங்குறுணி ஐஞ்ஞாழிமுழாக்கும் உச்சியம் போது சந்திக்கு அக்காரடலை போனகம் வீரசோழனுக்கு அரிசி னானாழிக்குப் பாலறு னாழிக்கு னெல் குறுணி னானாழியுந் னெய்னாழிக்கு னெல் தூணியும் வாழைப்பழம் எட்டுக்கு னெல் னானாழியும் அடைக்காயமுது வெறுங்கா(ய்*) ஐஞ்சுக்கு னெல்னாழியும் வெற்றிலையிருபதுக்கு னெல்லுரியும் ஆக

அக்காரடலைப் போனகத்துக்கு னெல்லிரு தூணி குறுணி முந்நாழியுரியும் இதுக்கு னாள் ஒன்றுக்குச் சற்கரை முப்பத்திருபலமாக னாள் மு(ந்*)நூற் றறுபதுக்குச் சற்கரை பதினோராயிரத்தைஞ்ஞூற்றிருபதின் பலத்துக்குக் காசொன்றுக்குச் சற்கரை ஐஞ்ஞூற்றெழுபத்தறு பலமாகக் காசு இருபதும் இரவை சந்திக்குப் பால்போனகத்துக்கு அரிசினானாழிக்கு னெல் குறுணி யிருனாழியும் பால்னாநாழிக்கு னெல் குறுணியும் பொரிக்கறியமுதொன்றுக் கினெல் னாழியுரியும் பொரிக்கறியமிதுக்கும் போனகத்துக்குந் னெய்யா ழாக்குக்கு னெல் நானாழியும் அடைக்காயமுது வெறுங்காயஞ்சுக்கு னெல் னாழியும் வெற்றிலையிருபதுக்கு னெல் உரியும் ஆக இரவைசந்திக்கு னெல் முக்குறுணியே (எழு)னாழியுஞ்

சீ(ஸ்ரீ)ராகவச்சக்ரவ(ர்)திக்கு உச்சியம்போதை சந்தி ஒன்றுக்கு அரிசி நானாழிக்கு நெல் குறுணி யிரு நாழியுந் நெய்யமுதுங் கறியமுதும் அடைக் காயமுதும் உள்ளிட்டனவையிற்றுக்கு னெல்லு நானாழியும் ஆக னெல் குறுணியறுநாழியும் ஆழ்வாற்குச் சந்நனக்காப்புக்குச் சந்தனந் னாள் ஒன்றுக்கு அரைப்பலமாக னாள் முன்னூற்றருபதுக்குச் சந்தனம் னூற்றெண் பதின் பலத்துக்கு காசொன்றுக்குச் சந்தனம் எட்டுப்பலமாகக் காசிருபத் திரண்டரையும் மேற்படிக்குக் கற்பூரப் பொத்தரசு நாளொன்றுக்கு அஞ்சு மாவாக நாள் முன்னூற்றறுபதுக்குக் கற்பூரம் பதினொரு க்ழஞ்சேகாலுக்குக் காசொன்றுக்குக் கற்பூரமரைக் கழஞ்சாக காசிருபத்திரண்டைரையுங் குங்குமத்துக்குக் காசொன்றும் ஆழ்வாற்குத் திருநுந்தா விளக்கிரண்டுக்கு னாளொன்றுக்கெண்ணையுரியும் இராத் திருச்சுற்றுமாளிகையிலே விடியுமளவுமெரியும் விளக்கு மூன்றுக்கெண்ணை யுழக்காழாக்கு மேற்படி யில் எரியும் சந்திவிளக்குப் பத்துக்கு விளக்கொன்றினுக்கெண்ணெய் ஒரு செவிடேகாலாக எண்ணெய் உழக்கேயிரு செவிடரையுமாக னாள் ஒன்றுக்கு எண்ணெய் னாழியாழக்கே யிறுசெவிடரையாக னாள் முன்னூற் றறுபதுக்கெண்ணெய் னானூற்றைம்பத்திரு னாழியுரிக்குக் காசொன்றுக் கெண்ணையிருபதினாழியாகக் காசிருபத்திரண்டரையே யரையேயரைக் காலும்

ஐப்பசித்திருனாளில் திருவிழாவெழுந்தருளும் அழகிய மணவாளர் ....னாள்ஏழில் லமுது செய்யப்போதொன்றுக்கு அரிசி பதக்குக்கு னெல்லு ஐங்குறுணியும் பருப்புரிக்குப் பயறு நாழிக்கு னெல்லிரு நாழியும் பொரிக் கறியமுதொன்றுக்கு னெல் னாழியும் புழுக்குக்கறி ஒன்றுக்கு னெல் னாழியும் மிளகுகறி ஒன்றுக்கு னெல் னாழியும் மிளகிருசெவிடரைக்கு னெல்லிரு நாழியும் உப்புழக்குக்கு நெல்லுரியும் அடைக்காயமுது வெறுங்காயஞ்சுக்கு னெல் நாழியும் வெற்றிலை யிருபதுக்கு னெல்லுரியுமாகப் போதொன்றுக்கு

னெல் எழுகுறுணியாகத் திருவிழாவெழுந்தருளுனாள் ·ழில் எழுந்தரு(ளு*)ம் போது பந்னிரண்டுக்கு நெல்லெழுகல(ம்*)

முன்னே மாசித்திருனாளெழுந்தரு(ளு*)ம் போது பந்னிரண்டுக்கு மேற்படியாக்கி நெல்லெழுகலமும் இத்திருநாளிரண்டிலும் வீரசோழன் திருனந்தாவநத்திற் திருவேட்டை யெழுந்தருளு(ம்*) நாளொன்றுக்குப் பெருந்திருவமுதரிசி கலத்துக்கு நெல்லி(ருகலனே தூ)ணிப்பதக்கும் பருப்பமு திருநாழிக்குப் பயறு னாநாழிக்கு நெல் குறுணியும் பொரிக்கறி யமுதொன்றுக்கு னெல்குறுணியும் புழுக்குக் கறியமுதொந்றுக்கு நெல் குறுணியும் மிளகுகறியமுதொன்றுக்கு னெல் குறுணியும் மிளகாழக்குக்கு நெல் நானாழியும் உப்பிரு நாழிக்கு நெல் னாநாழியும் நெய் நாழிக்கு நெல் தூணியும் தயிர் குறுணிக்கு நெல் பதக்கும் அடைக்காயமுது வெறுங்கா(ய்) நாற்பதுக்கு நெல் குறுணியும் வெற்றிலைப் பற்றிரண்டுக்கு நெல் நானாழியும் ஆக நாளொன்றுக்கு னெல் முக்கலநே தூணிப்பதக்கு நாநாழியாகத் திருவேட்டையெழுந்தருளு நாள் இரண்டுக்கு நெல்லெழுகலனே குறுணியும்

ஜயந்தஷ்டமி நாள் வெண்ணைக் கூத்தாழ்வானுக்கு பெருந்திருவமுதுக்கு அரிசி தூணிப்பதக்குக்கு நெல் கலநே முக்குறுணியும் பருப்பிருநாழிக்குப் பயறு நானாழிக்கு நெல் குறுணியும் பொரிக்கறிமுதொன்றுக்கு நெல் நானாழியும் புளுக்குக்கறியமுதொன்றுக்கு நெல் நாநாழியும் மிளகு கறியமுதுக்கு நெல் நானாழியும் (மிளகிருசெ)விடரைக்கு நெல்லிருநாழியும் உப்புரிக்கு நெல் நாழியுந் தயிரமுதுனாநாழிக்கு நெல் குறுணியும் நெய்யமுதுழக்குக்கு நெல் குறுணியும் அடைக்காயமுது வெறுங்காயிருபதுக்கு நெல் நானாழியும் வெற்றிலைப் பற்றொன்றுக்கு நெல்லிருநாழியும் ஆகப்பெருந்திருவமுதுக்கு நெல் கலனே இருதூணி ஐஞ்ஞாழியும் அற்றை நாளாலமுது செய்தருள அப்பத்துக்கரிசி குறுணியிரு நாழிக்கு நெல் நானாழியுந் னெய்யுரிக்கு நெல் பதக்கும் சற்கரையிருபதின் பலத்துக்கு நெல் தூணியும் மிளகாழாக்குக்கு நெல் நானாழியுஞ் சீரகமிரு செவிடரைக்கு நெல்லிருநாழியும் ஆக அப்பவமுது(க்கு*) நெல் கலனே குறுணி ஒரு நாழியுரியும் இத்தெருவிலெழுந்தருளிநாலமுது செய்தருள வாழைப்பழம் முப்பத்திரண்டுக்கு நெல் பதக்குந் தயிரமுது நானாழிக்கு நெல் குறுணியும் ஆக ஜயந்தியஷ்டமிக்கு நெல் முக்கலனேயரு நாழியுரியும்

கார்த்திகைக் கார்த்திகை நாள் பெருந்திருவமுதுக்கரிசி கலத்துக்கு நெல்லிருகலனே தூணிப்பதக்குப் பருப்பிருநாழிக்குப் பயறு னாநாழிக்கு நெல் குறுணியும் பொரிகறியமுதொன்றுக்கு நெல் குறுணியும் புழுக்குக் கறியமுதொன்றுக்கு நெல் குறுணியும் மிளகு கறியமுதொன்றுக்கு நெல் குறுணி புளிங்கறியமுதுக்குத் தயிர் குறுணிக்கு நெல் பதக்குஞ் சற்கரை பதின்பலத்துக்கு

நெல் பதக்கும் வாழைப்பழமிருபதுக்கு நெல் முந்நாழியுந்நெய்யமுது நாழிக்கு நெல் தூணியுந் தயிரமுது குறுணிக்கு நெல் பதக்கும் அடைக்காயமுது வெறுங்காய் ஐம்பதுக்கு நெல் குறுணியிரு நாழியும் வெற்றிலைப் பற்றிரண்டுக்கு நெல் னாநாழியும் ஆக நெல் முக்கலனேயிருதூணி முக்குறுணியெழு நாழியும்

இந்நாளில் விடியுமளவுந் திருவுண்ணாழிகையிலுந் திருச்சுற்றுமாளிகையிலும் எரியும் விளக்கிருநூற்றுக்கு விளக்கொன்றுக்கெண்ணையாழாக்காக எண்ணையிருபத்தைஞ்ஞாழிக்குக் காசொன்றேகாலும்

உடையார் ஸ்ரீவீரராஜேந்திரதேவர் ஆட்டைத்திருநாள் ஆவணித்திங்கள் திருவாயிலேயத்தில் ஆழ்வார்க்குத் திருமஞ்சனத்துக்குத் திருமுளைய்படப் பயறு நாழிக்(கு) நெல்விருநாழியுந் திருமுளைக்கீழட்ட நெல் பதக்குங் கலசம் நூற்றெட்டுச் சூழ நூலொருபலத்துக்கு நெல் குறுணியும் அடிக் கீழட்ட நெல் தூணிப்பதக்குந் திருச்சுண்ணத்துக் கரிசியிரு நாழிக்கு நெல் னாநாழியுந் நெய் நானாழிக்கு நெல் கலநேய் தூணியுந் தயிர் நானாழிக்கு நெல் குறுணியும் பால் நானாழிக்கு நெல்குறுணியும் (இ)ற்றைநாள் பெருந்திருவமுதுக்கு அரிசி கலத்துக்கு நெல்லு இருகலன் தூணிப்பதக்கும் பருப்பு நானாழிக்குப் பயறு குறுணிக்கு நெல் பதக்கும் புழுக்குக்கறியமுதொன்றுக்கு நெல் குறுணியும் பொரிக்கறியமுதொன்றுக்கு நெல் (குறு*)ணியும் மிளகுகறியமுதுதொன்றுக்கு நெல் குறுணியும் மிளகாழாக்குக்கு நெல் னாநாழியும் உப்பு நாழிக்கு நெல்லிருநாழியும் புழிங்கறியமுதுக்குத் தயிர் குறுணிக்கு நெல் பதக்கும் நெய் நாழிக்கு நெல் தூணியும் அடைக்காயமுது வெறுங்காய் முப்பதுக்கு நெல் குறுணியிருநாழியும் வெற்றிலைக்கட்டு மூன்றுக்கு நெல்லறுநாழி(யு*)ம் புளிங்கறிக்குச் சர்க்கரை பதின் பலத்துக்கு நெல் பதக்கும் வாழைப்பழம் இருபதுக்கு நெல் குறுணியிரு நாழியும் ஆக நெல்லறுகலனே ஐங்குறுணியிரு நாழியும் இத்திருநாளைக்குத் திருமுளையட்டப் பாலிகை சூழப்புடவையொன்றுங் கலத்தின் மேலடிப் புடவையொன்றும் திருமஞ்சனம் பண்ணுமாசாரி(ய)னுக்கு உடுக்கவும் உத்தரி(ய)மமிடப் புடவையிரண்டுமாகப் புடவை நாலுக்குக் காசொன்றுந் திருமஞ்சனமாடியருளத் தேன் நானாழிக்குக் காசரையும் குளகுந்தன் மஞ்சளைம்பதின்பலத்துக்குக் காசு காலும் ஸ்நபந த்ரவியங்கள் கொள்ளக் காசரையும் திருமஞ்சனமாடினால் சாத்த பரிசட்டமொன்றுக்குக் காசொன்றும் ஸ்நபநம் பண்ணுவிக்கும் ஆசாரியனுக்கு தக்ஷிணை காசொன்றும் அற்றைநாளாற் திருவோலக்கஞ் சேவிக்க வந்த ஸ்ரீவைஷ்ணவர்க்குந் திருவ(ய்மொழி வி)ண்ணப்பஞ் செய்வார்க்குங் குடுக்கும் பரிசட்ட வருப்பத்துக்குத் தனிசொல்லுந் திருவுக்குப் பரிசட்டத்துக்குக் காசரையும்*

இத்தன்மமுந் திருச்சுற்று மாளிகையுஞ் சனநாதன் மண்டபமுஞ் செய்வித்த வைஸ்யன் மாதவன் தாமயன் பிறந்த கார்த்திகைத் திங்கட்ப் பூராடத் தினாள்த் திருமஞ்சுணத்துக்கும் பெருந்திருவமுதுக்குந் நெல்லறுகலநே ஐங்குறுணி யிருநாழியும் இப்படிக்குத் திருமஞ்சநத்துக்கு வேண்டுவன கொள்ளவும் பரிசட்டம் பெறுவார்க்குப் பரிசட்டம் குடுக்கவும் மேற்படியாகக் காசாறேகாலும்

புரட்டாதித் திருவோணத்திநாள் வெண்ணைக்கூரத்தாழ்வான் ஜனனாதன் மண்டபத்தெழுந்தருளிநால் அப்பமுதுக்கரிசி ஐங்குறுணிக்கு நெல் கலனே நானாழியுஞ் சற்கரை முந்நூற்றுப்பலத்துக்கு நெல்லிரு கலனே தூணிப்பதக்கும் நெய் முந்நாழிக்கு நெல் கலமும் மிளகுக்குஞ் சீரகத்துக்கும் உப்புக்கும் நெல் முக்குறுணியும் அடைக்காயமுதெண்பதுக்கு நெல் பதக்கும் வெற்றிலைக் கட்டிரண்டுக்கு நெல் நானாழியும் ஆக நெல் ஐங்கலமும்

அமாவாஸ்யையில் ஆழ்வான் தீர்த்தம் ப்ரசாதித்தால் தீர்த்தமாட வந்தார் புறம்பில் ஜநநாதன்மண்டபத்துண்ணும் ஸ்ரீவைஷ்ணவர் இருபதின்மற்குப் பேரால் அரிசி னாழியுரியாக அரிசி முக்குறுணியறு நாழிக்கு நெல்லிரு தூணி குறுணி முந்நாழியும் புழுக்குக் கறியொன்றுக்கு நெல் ஐஞ்ஞாழியும் மிளகுகறியொன்றுக்கு நெல் ஐஞ்ஞாழியும் புளித்த கறியொன்றுக்குப் புளியுட்பட நெல் குறுணியொரு நாழியும் இலைக்கறிக்கு நெல்லிருநாழியும் மிளகாழாக்குக்கு நெல்க் குறுணியும் வெறுங்காய் நாற்பத்து நெல்க்குறுணி யும் வெற்றிலை பற்றிரண்டுக்கு நெல் நாநாழியும் அடுவான் ஓருவனுக்கு நெல் குறுணியும் ஆக அமாவாஸ்யை ஓன்றுக்கு நெல்க்கலனேயெழு குறுணி முந்நாழியாக அமாவாஸ்யை பன்னிரண்டுக்கு நெல்ப் பத்தொன்பதின் கலனே தூணி நானாழியும்

திருவேங்கடமாலைத் தீர்த்தமாடப் பெருங்கூட்டமாய் வந்து ஜனநாதன் மண்டபத்துண்ணும் ஸ்ரீவைஷ்ணவர் னூற்றுவர்க்குப் பேரால் அரிசி நாழியு மாக அரிசி கலனே தூணிப்பதக்கறுநாழிக்கு நெல் முக்கலனே இருதூணிப் பதக்கு நாழியும் பயறு குறுணிக்கு நெல்பதக்கு புழுக்குக்கறியொன்றுக்கு நெல் முக்குறுணியும் மிளகு கறியொன்றுக்கு நெல் முக்குறுணியும் புளித்த கறியொன்றுக்குப் புளியுட்பட நெல்த் தூணியும் இலைக்கறியொன்றுக்கு நெல்க் குறுணியும் மிளகு முழாக்குக்கு நெல் முக்குறுணியும் உப்புக் குறுணிக்கு நெல்ப்பதக்கும் நெய்யிருநாழிக்கு நெல்லிரு தூணியும் மோர் கலத்துக்கு நெல் தூணிப் பதக்கும் புளிங்கறிக்கு மோருக்கு நெல் தூணி பதக்கும் சற்கரை இருபத்திரு பலத்துக்கு நெல் தூணியும் வெறுங்காயிரு நூற்றுக்கு நெல் ஐங்குறுணியும் வெற்றிலைப் பற்றெட்டுக்கு நெல்ப்பதக்கும் அடுவார் இருவர்க்கு நெல் தூணியும் சுண்ணாம்புக்கு நெல் நானாழியும்

விறகிடுவான் ஒருவனுக்கு நெல்ப்பதக்கும் இலைக்கறியிடுவானொருவ னுக்கு நெல் பதக்கும் ஆக நெல் எண்கலனேயிருதூணி முந்நாழியும் இவர்கள் தீர்த்தமாடி மீண்டு வந்தால் ஸ்ரீவைஷ்ணவர் நூற்றுவர்க்கு மேற்படியாக்கி நெல்லெண் கலனேயிருதூணி முந்நாழியும் புரட்டாதித் திருவோணத்திநாள் தீர்த்தமாட வந்த ஸ்ரீவைஷ்ணவர் நூற்றுவர்க்கு மேற்படியாக்கி நெல் எண்கலனேயிருதூணி முந்நாழியும்

ஐப்பசித் திருநாளில்த் திருவிழா வெழுந்தரு(நெ)நாளாறில் நாள் ஒன்றிலுண்ணும் ஸ்ரீவைஷ்ணவ(ர்)ரிருபத்தைஞ்சாக நாளாறிலுண்ணும் ஸ்ரீவைஷ்ணவர் நூற்றைம்பதும் தீர்த்தமாடுமன்றுண்ணும் ஸ்ரீவைஷ்ணவரைம் பதும் ஆக........(லெ)நழுகலனே தூணியறுநாழியும் மார்கழித் திருவேகாத சியிலுந் த்வாதஸியிலுந் திருவாய்மொழி கேட்க வந்த ஸ்ரீவைஷ்ண வர்க்கி........ நெல்லெண்கலனேயிருதூணி முந்நாழியும்*

மாசி மகத்திருநாளில் இம்மண்டபத்திலுண்ணும் ஸ்ரீவைஷ்ணவரிருனூற்று வர்க்கு மேற்படியாக்கி நெல் பதினெழுகலநே தூணியறுநாழியும் திரு....... வனுக்கு நாளொன்றுக்கு நெல்லறு நாழியும் காசொன்றும் திருவாய்மொழி விண்ணப்பஞ் செய்வாரிருவற்குப் பேரால் நெல்லுக்கு.............. ன்றுக்கு நெல் முக்குறுணியும் பேராற்காசிண்டாகக் காசு நாலும்

வீரசோழன் திருநன்தவனம் உழப்பார் நால்வர்க்குப் பேரால் நெல்க் குறுணியாக நாளொன்றுக்கு நெல் தூணி.......த்திருவுற்சவங்களுக்குந் திருமஞ்சுணங்களுக்கும் நாட்சொல்லி நாளோலை தூக்குந்திருவுக்கு நாளொன்றுக்கு நெல் குறுணி.......ரிடயிரேற்றிக்கடமை தண்டி நிமந்தஞ் செலுத்தி நிற்கும் வைகானச தேவகன்மியொருவனுக்கு நாளொன்றுக்கு நெல் குறுணியுங் காசு நாலும் கணக்கெழுதி நிற்குங் க.........ன்றுக்கு நெல் குறுணியுங் காசு நாலும் ஆழ்வாற்குத் திருமஞ்சுணங்களுக்கு வேண்டுங் கலசமுந் திருமடைப்பள்ளிக்குஞ் ஜனனாதன் மண்............... கிடை களுக்குஞ் சாஸ்த்ரற்கும் ஆதுலசாலைக்கு வேண்டுங்கலமிருங் குசவனுக்கு நாளொன்றுக்கு நெல் குறுணியும் ஆழ்வாற்குப் பரிசட்டமுஞ் ஜனனாதன் மண்டபத்திலோது.................ஓத்துக் கேட்பாற்கும் ஆதுலற்கும் ஓலிக்கும் ஈரங்கொல்லிக்கு(ம்) நாளொன்றுக்கு நெல் நானாழியும் ஜநநாதன் மண்டபமும் ஆதுலசாலையும் நிமந்த............குந் திருமெய்காவலே திருமுக்கூடற் பேரையனுக்கு நாளொன்றுக்கு நெல் நானாழியுங் காசொன்றும் திருச்சுற்றுமாளிகை புதுக்குப்புறத்துக்கு நெல் நாற்பதின் கலமுஞ்ச..................*

மண்டபத்தில் ரி(ரு)க் வேதமோதுவிப்பாநொருவனுக்கு நாளொன்றுக்கு நெல் பதக்கும் யஜுர் வேதமோதுவிப்பாநொருவனுக்கு நாளொன்றுக்

(கு நெல்) பதக்கும் இவர்களிருவற்கும் பேராற் காசு நாலாகக் காசெட்டும் வியாகரணமும் ரூபாவத(ாமு)ம் வக்காணிக்கும் பட்டனொருவனுக்கு நாளொன்றுக்கு நெல் தூணியும் காசு பத்தும் ரி(க் வேதமோ)தும் பிராம்மணர் பதின்மரு(ம்*) யஜுர்வவேதமோதும் பிராமணர் பதின்மரும் வ்யாகரணமும் ரூபாவதாரமுங் கேட்கும் பிராமணரு(ம்*) சாத்திரர் இருபதின்மரும் மஹாபாஞ்சராத்திர ரொருபதின்மரும் சிவபிராமணர் மூவரும் வைகானசர் ஐவரும் தி............மார் இருவருமாக ஓதுவ(ாரும்) ஓத்துக்கேள்பாருமாக அறுபதிந்மர்க்குப் பேராலரிசி நாழியுரியாக னாளொன் றுக்கரி(சி தூ)ணிமுக்குறுணியிருநாழிக்கு நெல்லிருகலனே தூணியொரு நாழியும் பயறு நாநாழிக்கு நெல் குறுணியும் புழுக்குக்கறிக்கு நெல்லறு நாழியும் இலைக்கறிக்கு நெல் முந்நாழியு(ம்) மிளகு கறிக்கு நெல் குறுணி யும் புளித்தகறி(க்*)கு புளியுட்பட நெல் குறுணியும் மிளகாழாக்குக்கு நெல் நாநாழியும் உப்பு நாழிக்கு நெல் குறுணியும் நெய் நாழிக்கு நெல் தூணியும் மோர் தூணிப் பதக்குக்கு நெல் முக்குறுணியும் வெறுங்காயறுபதுக்கு நெல் குறுணி நாநாழியும் வெற்றிலை பற்றிரண்டுக்கு நெல் நாநாழியும் வயலைக் காவூர்நிந்று அரிசி கொடுவந்து விறகுமிலையுமிட்டுத் தண்ணீரட் டுமடுமடையர் மூவர்க்குப் பேரால் குறுணியாக (நாளொன்)றுக்கு நெல் முக்குறுணியும் பேராற்காசிரண்டாகக் காசாறும்

இம்மண்டபத் துண்ணுஞ் சாத்திரர்க்குங் கிடைகளுக்கும் பணிசெய்யும் பெண்டுக(ளிருவர்க்கு)ப் பேரால் நெல்லு நாநாழியாக நாளொன்றுக்கு நெல் குறுணியும் பேறாற் காசொன்றாகக் காசிரண்டும் சாத்திராக்குங் கிடைகளுக்கும் ஆதுலர்க்கும் கிடக்கப் பாயெழுபத்தைந்துக்குக் காசிரண்டும் கிடைகளுக்குஞ் சாத்திரர்க்கும் தலைக்கட்டச் சனியோன்றுக் கெண்ணெயிரு நாழியாக ஆண்டொன்றிற் சனி ஐம்பத்தொன்றுக்(கெண்ணை)னூற்றிரு நாழிக்கும் ஜநநாதன் மண்டபத்தோத்துக் கேட்பார்க்கு இராயெரியும் விளக்கொன்றுக்கெண்ணை உழக்காக ஆண்டொன்றுக்கெண்ணை தொண்ணூற்று நாழியும் இவ்வெண்ணை னூற்றுத்தொண்ணூற்றிரு நாழிக்குக் காசொன்றுக்கெண்ணையிருபதி நாழியாகக் காசொன்பதரையே யரைக்காலு ஜநநாதன்மண்டபத்(துக்கு)ப் புதுக்குப் புறத்துக்கு நெல் நாற்பதின் க(லமு)ம்

ஆது(ல)ர் சாலை வீரசோழநில் வ்யாதிபட்டுக்கிடப்பார் பதிநைவர்க்குப் பேராலரிசி நாழியாக அரிசி குறுணியெழு நாழிக்கு நெல் (தூணி ஐ)ஞ் ஞாழியுரியும் வ்யாதிபட்டுக் கிடப்பார்க்கும் பலபணி நிவந்தகாறர்க்கும் கிடைகளுக்குஞ் சாத்திரர்க்கும் வைத்யஞ் சொல்லக் காணியாகத் தநக்குந் தந் வர்க்கத்தார்க்கும் பெற்றுடைய ஆலப்பாக்கத்து சவர்ண்ணந் கோதண்ட

ராமந் அஸ்வத்தாம பட்டனுக்கு நாள் ஒன்றுக்கு நெல் முக்குறுணியும் காசெட்டுஞ் சல்லியக்கிரியை பண்ணுவா(னொருவ)னுக்கு நாளொன்றுக்கு நெல் குறுணியும் ஆதுலர்க்கு மருந்துகளுக்கு வேண்டும் மருந்து பறித்தும் விறகிட்டும் பரியாரம் பண்ணுவாரிரு(வரு)க்குப் (பேரால்) நாளொன்றுக்கு நெல் குறுணியாக நெல் பதக்கும் பேரான் காசொன்றாகக் காசிரண்டும் ஆதுலர்க்கு வேண்டும் பரியாரம் பண்ணி மருந்தடும் பெண்டுகளிருவர்க்குப் பேரால(ரிசி நா) நாழியாக நாளொன்றுக்கு நெல் குறுணியும் பேராற் காசரையாகக் காசொன்றும் ஆதுலர்க்குங் கிடைகளுக்குஞ் சாத்திரர்க்கும் வேண்டும் பணிசெய்(யும் நா)விசனொருவனுக்கு நாளொன்றுக்கு நெல் நாநாழியும்

ஆதுரசாலை வீரசோழனில் ஆண்டொன்றில்லிடு(ம்) மருந்து பிராம்யம் கடும்பூரியொன்றும் கருங்காய் நீங்க இப்படி......டும் வாசாஹரீதகிப் படியிரண்டும் தசமூல ஹரீதகி படியொன்றும் பல்லாதகஹரீதகி படியொன்றும் கண்டீரம் (படி)யொன்றும் பலாகேரண்ட தைலம் தூணியும் பஞ்சக தைலந் தூணியும் லஸுநாகயேரண்ட தைலந் தூணியும் உத்தம கர்ணாதி தைலந் தூணியும் உ...............(ப)தக்குஞ் சுக்.....................சாக்ருதம் பதக்கு(ம்*) பில்வாதிக்ருதம் பதக்கும் மண்டு(க)ர வடகம் இரண்டாயிரமும் த்ரவத்தி நாழியும் விமலை இரண்டாயிரமும் சுனெற்றியிரண்டாயிரமும் தம்ராதியிரண்டாயிரமும் வஜ்ரகல்பந் தூணிப் பதக்கும் கல்யாண லவணந் தூணிப்பதக்கும் இவையடுகைக்கு வேண்டும் மருத்(து*)களுக்கு நெ...........(ரையும்) தெ............யும் உள்ளிட்டன கொள்ளவும் ஆண்டுதோறும் புராணசர்ப்பி புதைக்கப் பசுவி(ந்) நெய் பதக்குங் கொள்ளவும்(க்)காசு நாற்பதும்

ஆதுரசாலையில் விராயெரியும் விளக்கொன்றுக்கெண்ணையாழாக்காக நாள் முந்நூற்றறுபதுக்கெண்ணை நாற்பத்தைஞ்ஞாழிக்கு காசிரண்டே காலும் ஜநநாதன் ம................ன்பில் தன்...யனுக்குப் பங்குனியுத்திரந் துடங்கிப் புரட்டாதிந் திருவோணத்தளவும் பரம்பாலூறத் தண்ணீர் கொடுவந்து வை(த்துச் சாய்)ப்பான் ஒருவனுக்கு நாள் ஒன்றுக்கு நெல் குறுணியாக நாள் நூற்றெண்பதுக்கு நெல் பதிநைங் கலமும் ஏலத்துக்கும் இலாமச்சத்துக்கும் நெல்விரு............பதக்கும் த............ண்யாகம் பண்ணின பிராமணர்க்குத் தக்ஷிணைக்கும் வெற்றிலை வெறுங்காய்க்கும் நெல் கலநே தூணியிருநாழி முழக்(கே மு)ச்செவிடும் வயலைக்காவூர் காணியுடைய மாதவன் தாமயன் வர்கத்தார்க்குப் புரட்டாதித் திருவோணத் திநால் குடுக்கும் பரிசட்டம் இர(ண்டு)க்குக் காசொன்றெயெழுமா....... மூவாயிரத்திருநூற்று நாற்பத்து முக்கலனேயிரு தூணிப்பதக்கரு

நாழியுழக்கே முச்செவிட்டுக்கும் காசிருனூற்றொருபத்தாரையே யிரண்டு மாவுக்கும் இக்காசுதவாவிடில் காசொன்றுத் தண்டவாணியோடொக்கும் பொன் காசு நிறைக்கால் இடுவதாகவும்

இப்படி யாண்டு ஆறாவது நிமந்தஞ் செய்தபடி இன்..........லுமிடத்து சாத்திரக் கண்காணியோடும் கிடைக் கண்காணியோடும் செல்லக்கடவதாக நிவந்தம் செய்தபடிக்கு கல்லு வெட்டுவித்தார் இன்நாடு கூறு செய்த அதிகாரிகள் சோழமண்டலத்து விஜையராஜேந்திர வளநாட்டு இடையள நாட்டு மீனற்குடையான் பசுவதி திருவரங்க தேவநாரான ராஜேந்த்ர மூவேந்தவேளார் பாண............ ஏவக் கல்லுவெட்டுவித்தான் ஜயங்கொண்டசோழ மண்டலத்துப் புழற்கோட்டத் தாகுடிநாட்டு அயண்டம் பாக்கத்து இறைவேட்டிந் குமரபாகூர்க்கத்தநான வீரராஜேந்திரச் செம்பிய தரையன் இந்த தந்மம் செய்வித்த தாமயனார் மகன் தாமயன் கங்கை கொண்ட சோழனான சேனாபதிகள் கங்கைகொண்ட சோழ தன்மபாலற்க்கும் இவர் தம்பியார் தா...............நான சேனாபதிகள் வீரராஜேந்திரதன்ம பாலற்குமாய் இதுகல்லுவெட்டுவித்தான் ஜயங்கொண்ட சோழ மண்டலத்து புழல் கோட்டத்து...... நாட்டு ஸதுவேதி மங்கலத்து பிராமணன் மாங்களூர் நமச்சிவாய தேவன் மகன் தழுவக் குழைந்தானான அபிமான மேரு பிரம்மமாராயன். இதர்மம் ஸ்ரீ மதுராந்தகச் சதுர்வேதிமங்கலத்து மஹாசபையார் ரக்ஷை ஸ்ரீ.

Women

Womens' status in Tamilnadu was generally high right from the Sangam age. Any group, will receive respect and dignity only when they are economically independent. The royal women, the dancing girls attached with temples and some aristocratic women led a life of dignity. They were educated, cultured and pious. They undertook many charity works including the construction of temples and its annexures, hospitals, schools, etc. The queens had the liberty of sitting with king in the courts and issuing orders. They had separate establishments, officials and treasury, even. Brahmin and *devaradiyar* ladies also held properties of their own and made profuse gifts to the temples. Sembianmadevi, mother of Uttamachola and queen of Gandaraditya and Kundavai, eldersister of Rajaraja I and wife of Chalukya Vallavaraiya Vandyadeva were some of the royal women deeply associated with religious activities. As already stated, in the establishments of the queens, lady officials also were employed; one of the inscription from Lokamadevisvaram constructed

by the Queen of Rajaraja I, refers to one lady official named 'Somayan Amitravalli' (No: 520 of SI.I.Vol.V). Another inscription from the same temple registers the donation of costly jewels studded with many precious stones by one Muttana Nangai, a lady officer of Queen Trilokyamudaiyar (No: 512 of SI.I. Vol.V).

Another category of women consists of temple and palace servants and the slaves also were referred freqently in the Tamil records. They did not have the right of holding property or making any decision of their own.

Select Inscriptions — Serial No: V : 4

District:	*Truchirappalli*	**Dynasty:**	*Chola*
Taluk:	*Truchirappalli*	**King:**	*Rajaraja I*
Village:	*Uyyakkondan Tirumalai*	**Regnal Year:**	*10*
Language:	*Tamil*	**Historical Year:**	*995 A.D.*
Script:	*Tamil*	**Earlier Publication:** 1. *ARE - 1892, No. 95* 2. *S.I.I. Vol-IV, No. 542*	

Location : On the east wall of the first *prakara* of the UJJIVANATHA TEMPLE.

Summary :

The subjoined inscription is a specimen for the fabulous donations given by the queens. Sri Sembiyan madevi donated a crown to the deity, which was made of 149 *kalanju* of gold and 190 of Silver, studded with 700 pearls, 3 *manikkam* and 27 diamonds.

Text

ஸ்ரீகாந்த(ளூ)ர்ச்சாலை கலமறுத்த கோவிராஜராஜகேஸரிவந்மற்கு யாண்டு 10 ஆவது

தெந்கரை பிரம்மதேயம் நந்திவந்ம்ம மங்கலத்து ஸ்ரீகற்குடி விழுமியார்க்கு கண்டன் மதுராந்தகதே(த)வரான ஸ்ரீஉத்தம சோழதேவரைத் திருவயிறு வாய்த்த உடைய பிராட்டியார் பிராந்தகன் மாதேவடிகளாரான ஸ்ரீசெம்பியன் மாதேவியார் திருக்கற்குடி ஆழ்வார் விழுமியார்க்கு

அபிஷேகஞ் செய்ய யாண்டு 10 ஆவது செய்து தந்து அபிஷேகஞ்செய்கின்ற ஸ்ரீமுடி க்,பொன்.

இப்பொன் நூற்று நால்பத்து ஒன்பதின் கழஞ்சும், இதனுக்கு உட்கூட்டி ரகச்செய்து தைச்ச வெள்ளி 190 இவ்வெள்ளி 190ம் கோத்த(மு)த்தும் வட்டமழுவி பகட்டின (ம)ாணிக்கம் 3ம், வ (யி)ரம் 27 ம், உடை(ய) ஸ்ரீமுடிக ப(த்*)தொன்பதிந் கழ(ஞ்)சரையே அரைய்(க்*)கால் (ச)ாமரை வெளிக்க(ா)ல் 1140 மாகேஸ்வரர் ரக்ஷை.

Select Inscriptions — Serial No: V : 5

District:	*Truchirappalli*	**Dynasty:**	*Chola*
Taluk:	*Truchirappalli*	**King:**	*Kulottunga I*
Village:	*Srirangam*	**Regnal Year:**	*II*
Language:	*Tamil*	**Historical Year:**	*1080 A.D.*
Script:	*Tamil*	**Earlier Publication:**	

Earlier Publication:
1. *ARE - 1936-37, No. 31*
2. *S.I.I. Vol. XXIV, No. 53*

Location : On the north wall of the fourth *prakara* of the SRI RANGANATHA TEMPLE.

Summary :

Among the divisions of the Tamil society *Idangai Valangai* stood as an important one. Though this terminology could be seen in many of the inscriptions, it started from the period of Rajaraja I. One among the regiments of Rajaraja, was named as *velaikkarar* in which *valangai* and *Idangai* were further divisions. They served as permanent troops, dependable in the royal service and were everready to defend the king at any cost. Several divisions named *Villigal, Valperrakaikolar, Kaikkolapperumpadai, Tennavan apattudavikal* etc, are referred in the inscriptions of Tamilnadu and Ceylon. Hardly any difference could be realised through the records among them in the earlier stage.

In course of time some differences leading to deep divisions. Casteism was deeprooted in the society, based upon the profession one undertook. Various trade and craft groups flourished and they grouped under this Valangai and Idangai banner. Some conflicts

among them and even revolts against the estblishment where they worked has been reported.

This subjoined inscription points to one of the such rebellions that erupted in Rajamahendrachaturvedimangalam of Gandaranadu. During that rebel, lion the village was burnt, the temple was destroyed and the images of deities and treasury of the temple burgled. The residents were evacuated. In a way of restoring the remaining wealth and people and also for maintaining the routine activities, the '*sabha* of Mahendramangalam, received a lump-sum from the temple and got certain lands exempted from the payment of taxes. From the record it is understood that the revolt burst in the 3rd year of Kulottunga I i.e. 1073 A.D. The relevent portion of the inscription is produced here.

Text

கோவிராஜகேசரிபந்மராந சக்கரவத்திகள் ஸ்ரீகுலோத்துங்கசோழ தேவற்கு யாண்டு 11 ஆவது

நித்தவிநோத வளநாட்டு காந்தார நாட்டு ப்ரம்மதேயம் ஸ்ரீராஜமகேந்தரச் சதுர்வேதிமங்கலத்து பெருங்குறிப்பெருமக்களோம் இவ்வாட்டை கற்கடக நாயற்று அபரபக்ஷத்து பஞ்சதஸியும் நாயிற்றுக்கிழமையும் ஆயில்யமும் பெற்ற இந்று..........புளிவில்லிவகை.........நல்லான் பட்டங் குளக்கரை யிலே தந்மி செய்து பெருங்குறி கூடியிருந்து விவஸ்தைபண்ணி நம்மூர் திருமேல்கோயிலாந ஸ்ரீமும்முடி சோழவிண்ணகராழ்வார் நிலங்கள் இறை யிலி செய்து குடுத்த பரிசாவது

இத்தேவர் ஸ்ரீபண்டாரத்து யாண்டு உ-ஆவது ஆநித்திங்கள் இடங்கை வலங்கையாய் ஊரும் சுட்டு ஓடுக்கி திருமுற்றங்களும் அழித்து திருவுருக் களும், ஸ்ரீபண்டாரங்களும் கள்ளரெடுத்துக் கொண்டு போய் இருந்த இடத்து கள்ளர்க்கு பிழைத்த திரவ்வியமு(ம்), ஸ்ரீ பண்டாரத்து இரக்ஷிக்க உண்ணாமையாலும் ஊரிருக்க சி(லர்ஊர்)ஏறுமிடத்து ஸபாவிநியோகத் துக்கு த்ரவியம் வேண்டுதலாலும், திருமுற்றங்களழிவு சோரவும் புநப்ர திஷ்டை பண்ணவு மதிள் (கட்டவும்) வேண்டுதலாலும்*

இத்தேவர்க் கந்மிகள் பக்கல் நாங்கள் கொண்ட பொந் குடிஞைக்கல்லால் இராஜேந்திரசோழந்மாடைக்கு அரை மாற்றுத் தாழும் பொந் அய்ம்பதிந் கழஞ்சும் இப்பொந்நுக்கு பலிசையாக பொலிஞ்ச பொந் இருபத்(தைய்ங்) கழஞ்சும் ஆகப் பொந் எழுபத்(தை)ய்ங்கழஞ்சும் பலிசை பொலிந்த பொந்

இருபத்தைய் கழஞ்சும் ஆகப் பொந் எழுபத்தைய்ங் கழஞ்சில் யாண்டு மூன்றாவது திருமுற்றம் அழிவு சோரவும் புநப்ரதிஷ்டை பண்ணவும் குடுத்த பொந் அய்ங்கழஞ்ச நீக்கிப் பொந் எழுபதிந் கழஞ்சுக்கும் சந்திரா தித்தவற் இறையிலி செய்து குடுத்த் நிலங்களாவது......

Select Inscriptions — Serial No: V : 6

District:	*Chengleput*	**Dynasty:**	*Chola*
Taluk:	*Chengleput*	**King:**	*Rajaraja-III*
Village:	*Tiruvorriyur*	**Regnal Year:**	*19*
Language:	*Tamil*	**Historical Year:**	*13th c.A.D.*
Script:	*Tamil*	**Earlier Publication:**	*1. ARE - 1892, No. 110* *2. S.I.I. Vol.IV, No-558*

Location : On the north wall of the first *Prakara* of the ADHIPURISWARA TEMPLE.

Summary:

The people were dedicated to the service of the temples, Though there is no reference particularly for their sale, mostly they were permanent employees. Rich people also had their own labourers to work in their land or in houses and they had the liberty of dedicating them either to a temple or transfer them to other places or persons.

The following inscription records the dedication of 5 ladies hereditarily to the temple of Tiruvorriyurudaiyar to do the work of dehusking paddy by Tiruvekambamudaiyan Senthamaraikkannan alias Vayiradarayan, of Virukanbakkam alias Chenninallur.

Text

ஸ்வஸ்திஸ்ரீ. திருவாய்க்கேழ்வி முன்(ப)ாக திரிபுவனச்ச(க்*)கரவத்திகள் ஸ்ரீராஜராஜ(தே)தவற்கு யாண்டு 19-வது (ம்*) ஸிம்ஹநாயற்றுப் பூர்வ பக்ஷத்து த்ரிதியையும் உத்திரட்டாதியும் பெற்ற நாயற்றுக்கிழமை நாள் ஜயங்கொண்டசோழமண்டலத்துப் புலியூர்க்கோட்டமான குலோத்துங்க சோழவளநாட்டுப் போரூர்நாட்டு விருகன்பாக்கமாக சென்னிநல்லூர் வயலூர்கிழவன் திருவேகம்பமுடையான் செந்தாமரைக் கண்ணனான வயிராதராயனேன்

உடையார் திருவொற்றியூருடைய நாயனாற்கு, நெற்குறுசாலைக்கு நெற்கு றக் கொண்டு விட்ட பெரியநாச்சியையும் இவள் மகள் மாரியையும் இவள் தங்கை கவுத்தாழ்வியையும் இவள் தங்கை திருவாண்டியையும் இவள் தங்கை வடுகாழ்வியையும் ஆகப் பேர் ஐய்வரையும் இன்னாயனார் நெற்குறு சாலைக்கு இவர்களும் இவ்வழியில் உள்ளாரும் சந்திராதித்தவரை நெற்குறுவதாகக் கொண்டு சிலாலேகைபண்ணிக்குடுத்தேன் வயலூர்கிழவன் திருவேகம்பமுடையான் செந்தாமரை(ர*)க்கண்ணனான வயிராதராயனேன்.

Select Inscriptions   Serial No: V : 6A

District:	*Chengleput*	**Dynasty:**	*Sambuvaraya*
Taluk:	*Chengleput*	**King:**	*Rajanarayana Sambuvarayar*
Village:	*Tiruvorriyur*	**Regnal Year:**	*5*
Language:	*Tamil*	**Historical Year:**	*1342 A.D.*
Script:	*Tamil*	**Earlier Publication:**	*1) ARE 1912, No: 212.*

Location : On the north wall of the first prakara at ADHIPURSIVARA TEMPLE.

Summary:

Devaradiyars an artistic group of people, well versed in music and dance and verymuch involved in the temple rituals, enjoyed a respectable status in society. They were conferred with the title of *Talaikkoli* and attached to almost all the big temples of Tamilnadu. During the reign of Rajaraja I he appointed 400 *devaradiyars;* most of them were the holders of that title, and working in different temples to the temple of Rajarajeswaram at Tanjavur. They were given land for their livelihood and houses to live around the big temple; the qualifications were also fixed and they were given the right of appointing the heirs in the future also. In course of time, the system got diluted and they were forced to lead a life of inferior dignity. However the system was in vogue till 19th century.

In the course of long history, according to their work in the temple, they were designated by different names, it seems, *patiyilars, taliyilar, ishabataliyilar, devaradiyar* are some among them. Some disputes were also reported and settled amicably by the officials of temple and government; one such

example is given here. While the elders and the original appointees were gone, new persons were appointed and in peforming the duties, some problems were encountered. This inscription records the allocation of work for different category, after the enquiry conducted by the *Srimaheswarar, sthanattar, nattar* Virachola Anukkar, *Kaikkolas,* in the presence of the pontiff of Bhiksha *madam* held at Vyakarana Danan *tirukkavanam.*

Text

ஸ்வஸ்தி ஸ்ரீ

இராஜ நாராயண சம்புவராயர்க்கு யாண்டு அஞ்சாவது திருஒற்றியூர் வியாகரணதானன் திருக்காவணத்து முதலியார் பிக்ஷாமடத்து முதலியார் திருமுன்பாககீழ மடத்து முதலியாரும் சோழ மண்டலத்தில் தனி மாகேச்வரரால் சித்தயாபரணமும், இத்திருக்காவணத்து ஸ்ரீ மகேசுவரரும், ஸ்தானத்தாரும், நாட்டாரும், வீர சோழ அணுக்கரும், கைக்கோளரும் இருந்து

பதியிலார் தேவரடியார் கோவில் சேவகத்துக்கு இவர்கள் பொருந்த அறுதி யிட்ட படிக்கி கல்வெட்டின படிக்கு முன்னாள் பெருமாள், எம்மண்டலமும் கொண்ட பெருமாள், சுந்தரபாண்டிய தேவர் நாளில் கொத்தப்பராயர் ஆன வாணராயர் இவ்வூரிலே அதிகாரமாய் இருந்த நாளில், நாங்கள் அனவரும் பொருந்த நிச்சயித்தபடி, பதியிலார் செத்தும் கெட்டும் போய்ச் சுருக்கமாகை யில், இவ்வூர்களுக்கு உதவியாக இஷபத்தளியிலாரை புகுத விடுகயில், தேவரடியார் முன்பு செய்து போந்தனமையான திருவலகு, திருமெழுக்கு, தளிகை, விளக்கு, அமுது படிக்கு அரிசி குத்தளக்கிறயிதுவும் தவிர்த்து இதுக்கு ஓர் நிமந்தமும் கட்டி

பதியிலார் சந்திக்குனிப்பமிடும் பொழுது, தேவரடியார் நாச்சியார்க்கு சந்திக்குனிப்பமிடவும் நாச்சியார்க்குப் பகலோலகம் இல்லாதிருக்க இதுவும் குடுத்து, திருக்கோயிலுடன் ஓலக்கமாக இருக்கவும் குடுத்து, வெண் சாமரமும் கவரியும் பணிமாருமிடத்து, பெருமாளுக்கு முதலியார்க்கும் பதியிலார் முன்பும் தேவரடியார் இவர்கள் பின்புமாக பணிமாரக் கடவார் களாகவும், தேவரடியார் திருநீற்றுக் காப்பு, புஷ்பதளிகை எடுக்குமிடங் களில், எல்லாமிடங்களும் எடுக்கவும், இஷவத்தளியிலாரும், அகமார்க்கமும் வரிக்கோலமும் ஆடவும், திருத்தோப்பில் திருஓலக்கத்துக்கு வரிக்கோலம் ஆடக் கடவார்களாகவும், பதியிலார் சொக்கமாடும்பொழுதும், சந்திக் குனிப்பமிடுபொழுதும், இஷபத்தளியிலார் பாடக்கடவார்களாகவும்.

பதியிலார் பாடும் இடங்களிலும் சிரி பலிக்குப் பாடும்பொழுது, இஷபத் தளியிலார் பாடவும், திருவெண்சாமரம் திருவந்திக் காப்பும் இஷபத்தளி யிலார் எடுக்கக் கடவார்கள் அல்லவாகவும், பதியிலாரும் தேவரடியாரும் சேவிக்குமிடத்து, சேவுகத் தாழ்வு படாதபடி சேவிக்கக் கடவார்களாவும்

பதியிலார் முன்பு ஆண்டு ஒன்றுக்கு பெறும் நெல்லு முப்பதிங்கலமும் பெறக்கடவார்களாகவும், தேவரடியார்க்குப் பொழுதுப்படியே பேர் ஒன்றுக்கு நாழி சோறு பெறக் கடவார்களாகவும், இப்படிக்குச் சேவுகத் தாழ்வு படாமல் சேவிக்கவும்.

இந்த திட்டப்படி அழியச் செய்தாருண்டாகில், தம்பிரானார் ஆணை மறுத்தார் பட்டதும், சிவதுரோகிகள் பட்டதுவும், பட்டு இப்படிக்கு இதுவே சாக்ஷி பத்திரமும், இதுவே கொடையும், இதுவே கோவில் கச்சமும், இதுவே கை ஓலையும், வாய் முட்டுமாக கொண்டு, கை முறுத்து கொள்ளக் கடவதாகவும் சம்மதித்து, இசைவு முறி இட்டோம், பதியிலாரும், வீர சோழ அனுக்கரும், தேவரடியாரும், திருக்காவணத்து கைக்கோளரும், இவ் அனைவரோம்.

Select Inscriptions Serial No: V : 7

District:	*Tanjavur*	**Dynasty:**	*Chola*
Taluk:	*Tirutturaippundi*	**King:**	*Rajaraja III*
Village:	*Vedaranyam*	**Regnal Year:**	*3*
Language:	*Tamil*	**Historical Year:**	*1218-19 A.D.*
Script:	*Tamil*	**Earlier Publication:**	

1. *ARE-1904-No.499*
2. *S.I.I.Vol-XVII - No.541*

Location : On the north wall of the first *prakara* in the VEDARANYESVARA TEMPLE.

Summary:

Like most of the countries, in Tamilnadu also slavery was prevalent in medieval period. Different categories of people, belonging to various professions were owned by the rich people. They were empowered to donate or sell the slaves to others. The sale deed of human beings was designated as *"alvilai pramanam"*. Many references could be given for this aspect of the society.

Korukkai inscription gives the list of 100 names of slaves donated to the temple. One of the specimens has been given here.

Inclusive of 5 already given, it records the sale of 10 slaves with their associates of the Sadaiyandi-Kuttam for 1000 Kasu by Araiyan pichan alias Edilichola Ganganadalvan, the guardian officer of Merpuram in Kunrurnadu to the authorities of the temple of Tirumaraikkadu-Udaiyar.

Text

ஸ்வஸ்தி ஸ்ரீ

திரிபுவச்சக்கரவத்திகள் ஸ்ரீராஜரா(ஜ) தேவற்கு யாண்டு 3வது*

உம்பளனாட்டுக் குன்றூ(ர்)நாட்டு உடையார் திருமறைக்காடுடை(யார்)கே(ா)யில் ஆதிதண்டேசுர தேவர்கன்மிகளுக்கு இந்நாட்டு மேற்புரம் காவல் அரியான் பிச்சனான எதிரிலிசோழ கங்கைநாடாழ்வாரே(னன்) ஆள்விலைப்பிரமாணஇசைவுதீட்டுக் குடுத்த பரிசாவது*

என் அ(டி)யாரில் சதையாண்டி (கூ)ட்டத்து வே(த)னான பட்டநாயக கண்ணப்பனையும் (கு)ரம்பன் ஆதிநாயகக்கண்ணப்பனை(யு)ம் உடையானான சொக்கநாயகக் கண்ணப்பனையும், கங்கனையும் திருவனையும், முன்னாளிலே எங்கள் முதலியார் க(ங்)கப்பிள்ளை ஆன ரா(ஜ)ரா(ஜ*)க் கங்கை நாடாழ்வார் நாயநாற்கு அடிமையாக குடுத்தமையில் இவர்களில், பின்பு கழநி ஆண்டியையும் (செ)பற்றானையும் ஆ(ண்)டாளியையும் ஆண்டானையும் திருக்களம்மழகியா(னையு)ம் இவர்களையும் இவர்(ற்க)கள் வற்க்கத்தாரை(யு)ம் விற்றுக்குடுத்து கொள்வதான காசு ஆயிரமும் சிபண்டாரத்து கை(க்*)கொண்டு இவர்களை விற்றுக்கு(டு*)த்தென் அரியான் பிச்சனான எதிரிலிசோழக் கங்கைநாடாழ்வானேன்*

இப்படிக்கு இவை எதிரிலிசோழக் கங்கை நாடாழ்வானெழுத்தும் சோழன் ஆனைகாத்தான் ஆன சோழியவரையனும், கூத்தன் திருவே(க)ம்பமுடையான் ராஜராஜக் கங்கை நாடாழ்வானு(ம்)(ச)யஞ்ஞையாதன்மைக்கும், இப்படிக்கு இவை அரியநாயகவேளான் எழுத்து

Asylum

